உ

பரமபதி துணை

## திருவள்ளுவர் கற்பம் 300.

## 7—சாஸ்திரங்கள் சேர்ந்தது.

இதில் ஞானாமிர்தசாரம் 100, கற்பக்குருநூல் 50, முப்புசூஸ்திரம் 30, வாத சூஸ்திரம் 16, முப்புக்குரு 11, வைத்தியசூஸ்திரம் 100, ஆக 7—சாஸ்திரங்கள் ஞானவெட்டி 1500 க்குச் சூஸ்திரமாகப் பாடியது இதில் குருநீர், செயநீர், பூநீர் முடிக்கும் விபரமும் முப்பூ இன்னதென்ற விபரமும் வழலை மார்க்கமும் தெளிவாய்க் கூறியுள்ளது.

கயம் பதிப்பு விலை ரூ 3—.00

## காகபுசண்டர் பெருநூல்

## காவியம் 1000.

இந்நூல் வெட்டுப்பட்டுப்போயிருந்ததை அச்சிட்டு வெளியாக்கியுள்ளோம் இதில் யோகம், ஞானம், அமுர்தசாரணை, வாசி, [illegible] முதலிய அநேக கர்மங்கள் அடங்கியது முக்கியமான நூல் கயம் பதிப்பு புக் 1 க்கு விலை ரூ 5—50

## கருவூரார் தொண்டியென்னும்

## வாத காவியம் 700.

இதில் கற்பம், வாதம், யோகம், ஞானம், வைத்தியம், முதலியதை தொண்டிச்சிந்தாகவும் மற்றும் பல சந்தங்களாகவும் பாடியிருக்கிறார் முக்கியமான நூல்

கயம் பதிப்பு விலை ரூ 2—50

## அகத்தியர் கற்பமுப்புக் குருநூல்.

இதில் கற்பவிதிகளும் முப்பூ விவரமும் பற்பம் செந்தூரம் [illegible], மெழுகு [illegible] தைலம், [illegible] செய்யும் முறைகளும் [illegible] முக்கோண சக்கரம் [illegible] பூஜாவிதிகளும் அடங்கியது. விலை ரூ 1—75.

குரு இராமசாமிக்கோன்.
புத்தகசாலை, 4 நெ. குருசாமிக்கோனார் சந்து,
வடக்கு மாசி வீதி, மதுரை.

உ

பரமபதி துணை

பகா மகத்துவம் பொருந்திய

# அகஸ்தியர்

# பூரண சூஸ்திரம் 216.



குரு. இராமசாமிக்கோன் (இ. ராம. கு சன்)
புக்செல்லர், ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸ்,
நெ. 4. குருசாமிக்கோனார் சந்து,
வடக்குமாசி வீதி மதுரை.

[illegible]மை] [விலை ரு. 1—75

THM

உ

பரமபதி துணை.

மகா மகத்துவம் தங்கிய

அகத்தியர்

திருவாய்மலர்ந்தருளிய

# பூரண சூஸ்திரம் 216.

இஃது

மதுரை வித்துவான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பார்வையிட்டபடி

(இ. ராம. கு சன்)

## ஜி. இராமசாமிக் கோன்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி குருசாமிக்கோனர் சந்து

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

காபிரைட்.) 1964. (விலை ரூ 1-50.

மதுரை வடக்குமாசி வீதி, குருசாமிக்கோனூர் தெரு,
ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது. 1964.
காப்பி 500, மூன்றாம் பதிப்பு.

Council for Research in Indian ...
LIBRARY
6669
3.9.70

உ

பரமபதிதுணை.

அகஸ்தியமுனிவர் அருளிச்செய்த

# பூரண சூஸ்திரம் 216.

காப்பு.

ஓடியதோர் தந்திமுகன் றனைப்பணிந்து
    உரைத்திடுவேன் பூரணசூஸ் திரத்தையானுங்
தேடியதோர் மந்திரத்தா லஷ்டசித்தி
    திறமாக வுரைக்கின்றேன் யோகியோர்க்குக்
கூடியதோர் கந்தமதைச் சிதம்பரத்தில்
    குணமான காலதனைக் கூட்டிமூட்டி
ஆடியதோர் ஐம்புலனை மூலத்துள்ளே
    அமைத்திட்ட மூலகண பதியேகாப்பு. (1)

ஒன்றான பூரணமு மாறுதார
    முரைத்ததற்கு மேலாறுந் தொண்ணூற்றாறும்
பண்டான தீட்சைபதி னொன்றும்ரெட்டி
    பத்துடனே முப்பத்து ரெண்டுதீட்சை
உண்டான சமாதிகற்பம் வாசிசேர்மை
    யுறைப்பான சிவயோகம் பிராணயந்தான்
நன்றான வாதத்தின் தீட்சையோடு
    நலமான சவுக்காரத் திறவுகோலே. (2)

திறவுகோல் முன்னுரைத்த நூல்கட்கெல்லாம்
    செய்பாகங் கைபாகந் தீட்சைபாகம்
அறைகிறேன் சரிகையொடு கிரிகைமார்க்கம்
    அப்பனே முனிசித்தர் நூல்கட்கெல்லா
மறைபுகழாய்ச் சொன்னதெல்லாம் வெளியாய்ப்பாடி
    மாட்டினேன் பூரணசூஸ் திரத்திற்காணும்
இறையளவுந் தப்பில்லை மறைப்போயில்லை
    இறுநூற்றுப் பதினாறு இந்நூல்காணே. (3)

## நூல்

காணப்பா விந்நூல்போ லொருநூலில்லை
நாசினியி லிந்நூலைக் கண்ணிற்காட்டார்
பூணப்பா வைம்பதுக்குள் பூசீர்வித்தை
பூட்டினேன் வயித்தியத்திற் புகழோமெத்த
காணப்பா வொருநூற்று வைம்பதுக்குள்
கலமான சூட்சத்தை காட்டினேன்பார்
பேணப்பா முந்நூற்றில் காமதாமம்
பேசினேன் தீட்சைவிதி யிருநூற்றுள்ளே. (4)

உள்ளான பூஜைவிதி யிருநூறுக்கும்
உத்தமனே முந்நூறிற் செந்தூரங்கள்
விள்ளவே ஆயிரத்தி யிருநூற்றுள்ளே
விளக்கினேன் கருவெல்லாம் வெளியாய்ப்போச்சு
எள்ளளவுந் தப்பில்லை மறைப்போயில்லை
யெய்துமென்ற கருவெல்லா மிதிலேயெய்துங்
கள்ளடா கள்ளருக்கு விந்தநூலைக்
காட்டாதே பன்னிரண்டுங் காத்தாலீயே. (5)

## ஆருதாரம்.

ஈவதுதா னுருக்கு சிவயோகிக்கு
இகத்திலுள்ள மானிடர்க்கு ஈய்ந்தாயானால்
நோய்மிகுந்து சாவாரே சொன்னேன்மைந்தா
நுண்மையாய் மனதில்வைத்து நுணுக்கங்கண்டு
தாய்பதத்தைப் பூசித்துக் கற்பங்கொண்டு
சமாதிக்கு ளிருந்துறைந்துத் தலைவணங்கி
நீமேலைமே லேறிவிடு லோகத்துள்ளே
நின்றுக்காற் கொல்லுமடா நீசஞ்சொன்னேமே. (6)

## மூலாதாரம்

நிசமான பூரணத்தைச் சொல்லக்கேளு
நின்மலர்த்தா யென்றனுக்கு வுபதேசித்தாள்
வசமான அடிமூலங் கணேசர்கோயில்
வட்டமா மைங்கோணத் திரிகோணத்தில்



வசமான கணேசரொடு வல்லபையுங்கூட்டி
யிருக்குமடா ஓம் ஈம் கிலீயுமென்று
வசமான அங்கிஷ கணபதி தேவாவென்று
வாழ்த்தடா குண்டலித்தாய் வணங்குந்தானே. (7)

வணங்குவதுக் கிப்படிநீ சக்கரத்தை
வரிசையாய்க் கீறியே யட்சரங்கள்
பிணங்காமல் ரீங்காரம் நடுவேயிட்டுப்
போரான கோணமைந்தி லைந்துமிட்டு
இணங்கவே தூபதை வேத்யத்தோடு
இலச்சமுரு வேற்றிடக்குண் டலிதானென்றுங்
கணமான கணபதிதான் பிரகாசிக்குங்
கயிலாயப் பாகதியைக் காட்டுந்தானே. (8)

## சுவாதிஷ்டானம்

காட்டுவது நாற்கோண மதன்மேலப்பா
கருதுவது விருகோண முக்கோணவட்டம்
பூட்டுவது பிரமனொடு சரஸ்வதியுங்கேளு
புகலுவேன் கங்-மங்-ஸ்ரீம்-ஐம் அங்-பிரமதேவாவென்று
கூட்டுவது லட்சமுரு வேற்றுதற்குக்
குறிசொல்வேன் நாற்கோணம் நாலெழுத்துமிட்டு
நீட்டுவது விந்துவிலே அங்கென்றிட்டு
நிலையாகப் பூசிக்க முத்தியாமே. (9)

## மணிபூரகம்

முத்தியாம் பிறைநடுவே முக்கோணமிட்டு
மூர்க்கமாய் மகாரமொடு உகாரமிட்டு
பத்தியாம் ஒங்காரம் ஸ்ரீங்காரங்கூட்டிப்
பச்சைவர்ண மூர்த்தியென்றே பகர்ந்துசேவி
சத்தியா மட்சரங்கள் நடுவேயிட்டுச்
சாற்றுவாய் லட்சமுருத் தானேயானால்
வெற்றியாங் குண்டலியும் மேலேயேறும்
வேதாந்த பூரணத்தில் சேர்க்குந்தானே. (10)

### அனாகதம்.

சேர்க்கின்ற முக்கோண ருத்திரமூர்த்தி
　　திகழான அறுகோண முன்னேயிட்டு
ஆர்க்கின்ற விந்துவதி னடுவேயிட்டு
　　அளவான சிகாரமொடு மகாரமிட்டு
பார்க்கின்ற ஸ்ரீங்கார ஓங்காரந்தான்
　　பகர்கின்ற வகாரமொடு கிலீயுங்கூட்டி
தீர்க்கின்ற ருத்திரத் தேவாவென்று
　　செபிக்கவே வாசியது யேறும்பாரே. (11)

### விசுத்தி.

பாரடா லட்சமுரு வேறிற்றானால்
　　பகருமறு கோணமதில் விந்துவிட்டுச்
சேரடா வகாரமொடு ஓங்காரந்தான்
　　சிறப்பான ஸ்ரீங்காரஞ் சிவாயநமாவென்று
தீரடா மயேசுவர தேவாவென்று
　　செபித்திடுவாய் லட்சமுரு திறமாய்த்தானே
ஆரடா வுனக்கீடு வாசிசித்தி
　　யாரெழுத்து மறுகோணத் தறைந்திட்டேனே. (12)

### ஆக்கினை.

அறைந்திட்ட மூன்றெழுத்து நடுவேபோடு
　　அருளான சதாசிவத்தி னருளைப்பாரு
விறைந்திட்ட விந்துவிட்டு நடுவேகேளு
　　விதமான வைங்கோண முக்கோணந்தான்
உறைந்திட்ட சோடசந்தா னைந்துங்கூட்டி
　　யுறவான அங்கிஷ ஐம் ஓம் என்று
பறைந்திட்ட சதாசிவதேவா யாவென்று
　　பகருவே னிலட்சமுரு பரிந்துநோக்கே (13)

நோக்கடா வைங்கோண மைந்துமிட்டு
　　நுணுக்கமடா விந்துவுக்குள் முக்கோணத்தில்
ஆக்கடா அம் அங்கிஷ ஐம் ஓமென்று
　　அப்பனே ஸ்ரீங்கார மிட்டுச்சேவி



மூக்கடா பாயாது வாசிதானு
　　முக்யமடா மேல்மூலத் தாணிப்பாரு
நாக்கடா அமுர்தமது கீழேபாயும்
　　நலமான கீழாறு நவின்றிட்டேனே. (14)

### மேலாதாரம்—அக்கினிமண்டலம்.

ஏனென்ற வாதார மேலேயாறு
　　மியம்புகிறே னன்றாக வியல்பாய்த்தானே
தேனென்ற சதாசிவத்தின் மேலேகேளு
　　தீயான மண்டலந்தான் திரிகோணமாகி
வானென்ற மண்டலத்தில் திரிகோணத்தில்
　　வைத்திடுவா யகாரமொடு சவ்வுந்தானே
கானென்ற மலமறுக்கு மக்கினிமண்டலத்திற்
　　கண்டிப்பு வற்றுவிடுங் கனலிற்றானே. (15)

கனலிலே வாயுலர்ந்து புக்கிற்றானாற்
　　கண்திறந்து வமுர்தமது கனிந்துபாயும்
புனலான வமுர்தமுண்டால் காயமீறும்
　　போச்சுதடா நரைதிரையும் புதுமையாச்சு
அனலிலே வெந்தவொரு பாண்டந்தானு
　　மசையுமோ நீருக்கு வதுபோலப்பா
நினைவிலே யித்தியான மூட்டுமூட்டு
　　நிச்சயமாய்ச் சமாதிக்குள் நிலைக்குந்தானே (16)

### சூரியமண்டலம்.

நிலையான வழற்குள்மண் டலத்துக்கப்பால்
　　நேரான சூரியமண் டலத்தைக்கேளு
சிலையான விந்துவடா உகாரமிட்டுச்
　　செபித்திடுவாய் சூரியனே கோடிகாந்தி
மலையாமல் வாயுவதிற் சேர்த்ததானால்
　　மைந்தனே யுன்னுடலிற் பிரகாசத்தைக்
கலையான சூரியனைப் போலாந்தேகங்
　　கல்மிஷங்க ளில்லையில்லை காணுங்காணே. (17)

## சந்திரமண்டலம்.

காணுகின்ற சூரியமண் டலத்துக்கப்பால்
கலைமதியாஞ் சந்திரமண் டலத்தைக்கேளு
தோணுகின்ற சோதியடா மௌனவீடு
சொல்லரிது சொல்லுகிறேன் அங்கென் றாறு
பேணியே ஜெபித்திடவே ஜோதிகோடி
பிரகாச மாயிடுங்காண் பெருமைபேசார்
ஆணுவங்க ளற்றதடா அரூபா ரூபம்
அக்ஷரங்க ளற்றவிட மறையக்கேளே. (18)

கேளப்பா ஓங்கார மதன்மேல் நிற்கும்
கெடியான வைக்துமூன் றெழுத்துமீதில்
நாளப்பா பஞ்சகர்த்தா ஐவரீதில்
நலமான ஆன்மஜீவ களையுமீதில்
வேளப்பா ஓமென்று தியானஞ்செய்ய
வித்தான பிறவியெல்லா மற்றுப்போச்சு
சூளப்பா பிறவியுமிவ் வளவேயாச்சு
துலங்கிநின்ற பூரணத்தைச் சொல்லப்போமோ. (19)

## ஏகாட்சரம்.

போமென்ற பூரணமு மிதுவேயாச்சு
பூரணமாஞ் சூட்சத்தைப் புகலக்கேளு
தாமென்ற அகாரத்தில் உகாரமிட்டுத்
தனித்துநின்ற ஓங்காரஞ் சுற்றிக்கட்டி
வர்மென்ற மதின்கீழே மகாரமிட்டு
மகாரத்தின் மேலேறி அகாரத்துள்ளே
ஊமென்ற ரீங்காரம் நடுவேயிட்டு
யுயரவே சூலமிட்டு சிங்குவங்கே (20)

வங்கென்று இருபுறமும் வைத்தாயானால்
மைந்தனே சூட்சமது ஏகசூக்ஷம்
யங்கென்ற பூரணமு மிதுவேயாச்சு
பகருகின்ற மந்திரமு மிதுவேயாச்சு



தங்குமே சடாட்சரமு மிதுவேயாச்சு
தருவான எட்டெழுத்து மிதுவேயாச்சு
அங்குபஞ் சாட்சரமு மிதுவேயாச்சு
ஆதியென்ற மூன்றெழுத்து மிதற்குள்ளாச்சே (21)

ஆச்சடா தசதீட்சை யிதனுக்குள்ளே
அண்டசரா சரங்களெல்லா மிதனுக்குள்ளே
பேச்சடா வொன்றுமில்லை யிதனையல்லோ
பெரியோர்க ளுரையாமல் மறைத்தாரையா
வாச்சடா ஐம்பூத மிதனுக்குள்ளே
மதியிரவி யானதுவு மிதனுக்குள்ளே
காச்சடா அண்டமொடு புவனமெல்லாங்
கலந்துநின்ற வத்துவிதங் கண்டுகொள்ளே. (22)

கண்டுகொள்ளு மிவ்வெழுத்தைக் கற்பமெட்டில்
காணப்பா பதிற்றுடனே கர்மமறுங்
கண்டுகொள்ளு மிவ்வெழுத்தை யாதாரத்தில்
கர்மமாந் தீவினைகள் காணாதோடும்
கண்டுகொள்ளு மிவ்வெழுத்தை யாதாரத்தில்
கட்டாக வைத்துடனே வாசியேறுங்
கண்டுகொள்ளு மிவ்வெழுத்தைப் பெரியோரெல்லாங்
காட்டினார் நூல்தோறுங் காணாதென்றே. (23)

காணாது ஆணுமல்ல பெண்ணுமல்ல
கருதியப்பா ரவியுமல்ல கருதிச்சொல்லத்
தோணாது வுருவொன்று மரூபாரூபந்
துலங்கிநின்ற பூரணத்தைச் சொல்லிவிட்டேன்
கோணாமல் நின்றவரே குருவைக்காண்பார்
குருக்காணா ரானைகண்ட குருடாகும்
மாணான ஆதார தீட்சையாறு
மப்புறத்தில் நின்றதொரு ஆறுஞ்சொன்னேன் (24)

ஆறுறு பன்னிரண்டு தலமுஞ்சொல்லி
அதில்நிற்கு மட்சரஞ்சக் கரமுஞ்சொல்லி
ஏறுத வாசியது ஏற்றஞ்சொல்லி
யேகாட்சர பூரணமு மெடுத்துக்காட்டி.
கூறுத கருவையெல்லாங் கூறினேன்யான்
கூற்றனின்ற பிட்டமிதுதான் குறித்துப்பாரு
தேறுத பேருக்குந் தேறுந்தேறுஞ்
சிவசிவா பூரணத்தின் திறந்தான்காணே (25)

### சிவதீட்சை பதினொன்றின் விபரம்

#### 1-2-தீட்சை.

திறமான தீட்சையது வழியதாகச்
செப்புகிறேன் சிவதீட்சை பதினொன்றுந்தான்
கறவாதே கறந்ததொரு பால்போலப்பா
காசினியோர் பிழைக்கவென்று கருவைச்சொன்னேன்
மறவாதே நீகேளு அம் உம் சிம் வம் யம் ஓமென்று
வளர்த்துவாய் முதற்றீட்சை மருவிக்காணும்
நிறைவாக அவ்வும் மவ்வும் ஓம் நமசிவாயாவென்று
நிகழ்த்துவா யிரண்டான தீட்சைகேளே. (26)

#### 3-4-தீட்சை.

நேரான மூன்றாகுந் தீட்சைகேளு
நிச்சயமாய் உம் அம் சிவ சிவாயாவென்று
வேரான ஓமென்று செபித்தாயானால்
வெற்றியடா மூன்றான தீட்சையாச்சு
பாராய்நீ நாலான தீட்சைகேளு
பகருவேன் சிவாயநம ஓம் ஐம்மென்று
சீராகச் செபித்திடுவா யைந்தாந்தீட்சை
செப்புகிறேன் நன்றாகத் தெளிந்துகொள்ளே. (27)

#### 5-6-7-தீட்சை.

தெளிவாக வைந்தான தீட்சைகேளு
சிவசிவா அவ்வும் உவ்வும் சவ்வும் ஓம்என்று
நளினமா யாறான தீட்சைகேளு
நவிலுகிறேன் மவ்வும் உவ்வும் நமசிவாய



குளிவாக ஓம்என்று செபித்தாயானால்
கூறுவேன் ஏழான தீட்சைமார்க்கம்
எளிதாகக் கிலீம்நமசிவாய அவ்வும் ஓமென்றே
யேற்றுவா யெட்டான தீட்சையெண்ணே. (28)

#### 8-9-தீட்சை

எண்ணவே ஓம்ஐயும் சிவ அங்கிஷாயா
யென்றுதான் செபித்திடுவா யெட்டாந்தீட்சை
பண்ணவே யொன்பதாந் தீட்சைகேளு
பரிவான சிவாயநம அம் உம் றுமென்று
உண்ணியே யோதிடவே பத்தாந்தீட்சை
யுரைத்திடுவாய் பதினொன்றாந் தீட்சையோத
நண்ணவே முன்மவுனம் ஏகதீட்சை
நாட்டினேன் பூரணத்தை நயந்துபாரே. (29)

#### ஆதாரம் பன்னிரெண்டின் தீட்சைவிபரம்.

பாரப்பா தீட்சையது பதினொன்றுந்தான்
பரிவான ஆதாரம் பனிரெண்டுக்கும்
நேரப்பா வொவ்வொன்றுக் கொன்றேதீட்சை
நிறுத்தியே யாதாரம் நிலைத்துப்பாரு
சீரப்பா பன்னிரெண்டுக் கொன்றேதீட்சை
செப்பினேன் பூரணத்திற் செப்பினேன்நான்
ஆரப்பா தீட்சையொன்றுக் காதாரமொன்று
ஆண்டொன்று தீட்சையொன் றழுத்திப்பாரே. (30)

### சத்திதீட்சை பதினொன்றின் விபரம்.

#### 1-2-3 வாலை தீட்சை.

அழுத்தமாய் சத்தியுட தீட்சைபதினொன்று
மறைகிறேன் உம் ஆம் மம் ஈம் ஓமென்று
வழுத்தவே வாலையுட தீட்சையாச்சு
வரிசையா யிரண்டான தீட்சைகேளு
பழுத்ததொரு யம் ரம் அம் உம் மம் ஓமென்று
பரிவாக வோதிடவே பலிக்குஞ்சித்தி
எழுத்தாகு மூன்றான தீட்சைகேளு.
ஈம் ஓம் அம் உம் மம் என் றிதனையோதே. (31)

4-5-6-தீட்சை.

ஓதவே நாலான தீட்சைகேளு
உம் மம் அம் ஈம் ஐம் ஓம் என்றேறு
ஏதமா மைந்தான் தீட்சைகேளு
கிலீம் ஓம் மம் அம் ஐயென்று கிருபையாக
வேதமாம் ஆறான தீட்சைகேளு
விளங்கவே ஓம் வம் ஈம் விதமாய்த்தானே
நீதமா மேழான தீட்சைகேளு
நிலைத்ததொரு ஸ்ரீம் ஈம் அம் ஐயுமென்றே. (32)

8-9-10-தீட்சை.

என்றுநீ எட்டான தீட்சைகேளு
இயம்புவாய் சவ்வும் அவ்வும் மவ்வும் ஓமென்று
தன்றுநீ யொன்பதாந் தீட்சைகேளு
நம் மம் சிம் வம் ஐம் ஓம் நலமாய்த்தானே
யொன்றுநீ பத்தான தீட்சைகேளு
உம் மம் சம் ஈம் ஓமென் றுறவாய்த்தானே
சென்றிடவே பத்துந்தான் தேவிதீட்சை
திறமாகத் தேவிபத்துந் தெளிந்துபாரே. (33)

11-தீட்சை.

பாரென்றேன் பதினொன்றாந் தீட்சைகேளு
பகருவேன் ஓம் ரீம் சம் மம் என்றேதான்
பூரென்ற பூரணமா மேகதீட்சை
பூட்டினே னாதார தீட்சையுள்ளே
கேரென்றேன் பூரணமாம் வாலைதீட்சை
நிகழ்த்தினேன் கண்டுகொள்ளு நிசமதாகத்
தீரென்றேன் தீட்சைபத்து மாதாரத்துள்
திறமாக வொன்றுக்கு வருடமொன்றே. (34)

தீட்சைசெய் மார்க்கம்.

வருடமாந் தசவருட மாருசெய்வார்
மைந்தனே சித்தரொடு முனிவர்செய்வார்
பரிஷமா யுலகத்து ளுள்ளபேர்கள்
பத்திகொண் டலைவார்க ளுரைக்கமாட்டார்



துரிதமா யுரைத்தாலுங் குருக்காணாது
சொல்லுதற்கு வுரைப்பார்கள் நூல்காணாது
புருஷமாய் கோர்வைநூல் கிட்டாவிட்டால்
போக்கென்ன வாசையென்ன பொய்யதாமே (35)

நூலின் மகத்துவம்.

பொய்யாம லிருக்கவென்று மிந்நூல்வேணும்
புகலரிய தீட்சைக்கும் யோகத்துக்கும்
மெய்யான கற்பமுதல் காயசித்தி
விருதான வாதவித்தை குளிகைசித்தி
வகையான கைமுறைகள் வாததீட்சை
கருவான மறைப்பென்ற சவுக்காரப்போக்கு
உய்யாம னூல்களிலே யொளித்தபாகம்
ஒளியாம லெடுத்துரைத்தே னுண்மையாமே. (36)

நூலின்மார்க்கம்.

உண்மையா யிந்நூல்தான் கிட்டாத்தோஷம்
உலகத்தின் மாவிடர்க ளுளறிப்போனார்
தன்மையில்லா விந்நூல்யார் கொடுக்கப்போறார்
சாத்திரந்தான் மெத்தவுண்டு சமுசயந்தீராது
வெண்மையாய்ச் சட்டமுனி தீட்சையிருநூறும்
விளம்பினார் வெளியாக வென்றுமூலர்
அண்மையாய்க் கிழித்தாரே ஐயோவையோ
அல்லாம லின்னமொரு ஆகங்களே. (37)

சாபவரலாறு.

ஆகமங்கள் பாடுமுன்னே நவசித்தாதி
யதன்பிறகு நவகோடி கோடாகோடி
பாகமுட னுச்சுதென்று பேசிக்கொண்டு
பரமசிவன் சாபமிடப் பாவித்தார்காண்
யேகமாய்ச் சாபமிட்டோம் வாமத்துக்கு
மியலான வச்சாங்கள் தீட்சைமார்க்கம்
போகமா யுயிர்களைத்தான் வாங்கிப்போட்டோம்
போட்டதனால் நூல்களெல்லாம் பொய்யாய்ப்போச்சே ()

நூல் சித்தி.

போச்சுதென் றலையாமல் சிவனுத்தாரம்
பூட்டியே கேட்டுகா ணிந்தநூலில்
ஆச்சுதென் று மறைத்ததெல்லா மருளிச்செய்தேன்
அரகரா சாபங்கள் நிவர்த்திசெய்தேன்
மூச்சுதென் று போகாமல் முறைதப்பாமல்
முன்னதோ பின்னதோ வென்றெண்ணுமல்
காச்சுதென் று காய்ச்சிவிட்டே னுலகத்துள்ளே
கண்டவர்க்கிந் நூல்சித்தி முத்தியெண்ணே (39)

நூலீயாமை.

முத்தியிது மோட்சமிது சித்திகோடி
முக்கியமிது சித்தருக்குங் காட்டொண்ணுது
சத்தியமிது சம்புவிது வொன்ருய்ச்சொன்னேன்
சகலநூற் கெல்லாந்தான் குருநூலப்பா
எத்தினுர் சாபத்தை நிவர்த்திசெய்து
ஏத்தினல் திட்சைதா னெளிதிலாகும்
புத்தியுட னிந்நூல்தா னுர்க்குக்கிட்டா
புண்ணியர்க்கே இதுகிடைக்கும் பொருளேப்பாரே. (40)

சாப நிவர்த்தி.

பொருளான சாபங்கள் நிவர்த்திசெய்யப்
பூட்டினேன் சாபமது பொய்யாய்ப்போகா
அருளான சிவாயநம அம் உம் என்று
அப்பனே சிம் கிலீம் ஸ்ரீம் ஓம் என்றேதான்
மருளாமல் ரம் மம் யம் ஓம் என்றேதான்
மாட்டுவாய் லெட்சமுரு வேறிற்ருனல்
இருளான சாபங்கள் நிவர்த்தியாகும்
ஏகமாய்ச் சொல்லிவிட்டே னியம்பக்காணே. (41)

வயிரவர் தியானம்.

இயம்புவேன் வயிரவன்றன் தியானங்கேளு
இயல்பாக யம் ரம் லம் ஷம் சிங்கென்றேதான்
சயம்பாக ஷங் வங் மங்கென்று
சாத்தியமாய் வயிரவத்தி னுமந்தானே



சயம்பெறவே எண்கோண மிட்டுத்திரு
நாட்டுவாய் வன்றுவொடு சுத்திவைத்து
செயம்பெறவே பூசைசெய் வடமாலைசாத்தி
சித்திக்குஞ் செய்தொழில்கள் திறமாய்த்தானே. (42)

சுப்பிரமணியர் தியானம்

திறமாகச் சுப்ரமண்யர் ஜெபத்தைக்கேளு
செயமாகு மெந்தனுட குருதானப்பா
அறமாக அம் உம் ஓம் ஸ்ரீம் ஈம் சம் வம் சரவணபவதேவாயா
அறுமுகவா சிவசுப்ர மண்யநமாவென்று
ஊறவான அறுகோணம் நடுவேவீத்து
உத்தமனே விருத்தமொன் று வாசல்நாலு
திறமான நால்வாசல் வீரபாகுதேவா
நிச்சயமாய் வைத்துநீ பூசிப்பாயே. (43)

அகஸ்தியர் தியானம்

பூசிப்பாய் பாணமொடு சுத்திவைத்துப்
புகழான ஜாதிபுஷ்பம் புழுகுபூரம்
ஆசிப்பாய் சுப்ரமண்யர் சித்தியாகும்
அப்பனே கேட்டதெல்லா மருளிச்செய்வார்
நேசிப்பாய் யென்னுடைய தியானந்தன்னை
நினைத்திடவே சித்திவந்து நிலைக்கும்பாரு
வாசிப்பாய் ஓம் சிம் வம் அம் உம் மம் தான்
மகத்தான அகத்தீசா வென்றகூறே. (44)

பிராணுயம்.

கூறிடுவா யென்குருவே நந்தியென்று
கோணமுமா முக்கோணஞ் சுழினைமீது
ஏறுவாய் பிராணுயம் வாசியேறும்
இடகலையாஞ் சந்திராணி லேறுயேறு
பேருபெற வேண்டிலறு லட்சந்திரு
பிராணுயஞ் சித்தியடா யோகசித்தி
ஆறுடனே யாறுரும் பன்னிரெண்டும்
அப்பனே பூரணத்தி லடக்கிப்போமே (45)

தூல நிலையாமை.

அடங்கினா லாறுதிவம் வெளியாய்க்காணும்
அதீதமென்ற மேலறுபூ ரணமுந்தோன்றும்
துடங்கினால் சிவயோகந் துடங்கவேணும்
துரியாதீ தந்தனிலே நிற்கவேணும்
நுடங்கினால் கூடுவிட்டுச் சிவன்போனால்
நோக்கினதிற் பிறக்குமென்று சொன்னார் முன்னோர்
அடங்கினா லொன்றுமில்லை வருவதேது
அச்சடத்தை வாழ்வித்தா லவனேசித்தன் (46)

பிறவி வருகுதல்.

சித்தனாய்ப் பிறப்பதுதா னென்றாக்கால்
செகத்திலே கோடியிலே யொருவனுண்டு
உத்ததொரு விட்டகுறை யென்பதென்ன
வுதித்தகலை யெங்கோ மூணிப்பாரு
பெற்றபே ரெப்படித்தான் வந்ததானால்
பிராணனல்லோ பூரணத்திற் சேர்ந்ததாலே
முத்தனா யெடுத்தசடஞ் சித்தியாகும்
முன்னுமில்லை பின்னுமில்லை முறையைப்பாரே. (47)

கற்பமுண்ணும் முறைமை.

முறையாகக் கற்பத்தைச் சொல்லக்கேளு
மூதண்ட லேகியமும் அயக்காந்தந்தான்
துறையாக வறுசுவையுங் கழற்றுமுன்பே
துரிதமாய்க் கொண்டுவிடு மண்டலந்தான்
நிரையாக வல்லாரை வருஷமொன்று
சேயமாய்க் கொண்டபின்பு கடுக்காய்கொள்ளு
அறையாமல் அதன்பிறகு மிளகுகொள்ளு
அதின்பிறகு கொங்கணர்சொல் முறையைக்கொள்ளே ()

வல்லாரை விபரம்.

கொள்ளுதற்கு வல்லாரை முறையைக்கேளு
குழிவெட்டிக் கருப்பேற்றிப் பயிரேசெய்து
விள்ளுகிறே னிதையெடுத்துக் காடிவார்த்து
வெண்மைபெறக் கழுவியே நிழலிற்போடு



உள்ளுறவே யுலர்ந்தபின்பு யிடித்துத்தூளா
யுத்தமனே புதுக்கலசந் தன்னில்வைத்து
தெள்ளுறவே காடியிலே திண்ணவேணுஞ்
செப்புகிறேன் காடிவைக்கச் செய்கையெண்ணே. (49)

காடி வைப்பு.

எண்ணவே கருங்குருவை நெல்லைக்குத்தி
யியலான புதுப்பானை தனிற்சமைத்து
வண்ணமாய்ச் சுத்தஜல மதனில்வார்த்து
வைத்திடுவாய் மண்டலந்தான் வேடுகட்டி
சொன்னதொரு வெய்யலிலே தினமும்வைத்துச்
சுறுதியாய் மறுபானை பகுந்துமூடி
முன்னுள்ள பாண்டத்தை யனலிற்காய்ச்சி
முறையாக வதிலிட்டு சுத்தஜலம்வாரே. (50)

காடி மருத்துவம்.

ஜெலம்வார்த்துப் பின்னுமதை ரவியில்வைத்துச்
செய்திடுவாய் மண்டலத்துக் கொருசோறாக
நலமாக வெவ்வேறே பகுந்துகாச்சி
நாட்டிலே வெயிலில்வைத்து ஆறுமாதம்
பெலமான காடியிது வல்லாரைக்குப்
போசாதே யிக்கருவைப் பெரியோர்சொல்லார்
அலையாமல் வல்லாரைச் சூரணத்தை
யழகான புன்னைக்கா யளவுகொள்ளே. (51)

கொள்ளடா சமாதியிலே யிருக்கும்போது
கூறுகப் பூசித்துத் தீட்சையோதி
விள்ளடா வெயிலுடனே காற்றுமாகா
மேனியது வுலவாகா கிலேசமாகா
தள்ளடா யெண்ணெய் சுண்ணம் கடுகுவுள்ளி
தாரணியில் பெண்மாய்கை சற்றுமாகா
கள்ளடா வாகாது கஞ்சாவாகா
காசினியின் மீன்இறைச்சி யாகாதீக்கே. (52)

அடக்கம்.

நீக்குவது புளியோடு இலையுமுப்பும்
நிலையான வுறக்கமொடு கோபமாகா
ஆக்குவது சுணையாகா பொய்யுமாகா
அப்பனே மனமொன்றாய்ப் புத்தியொன்றாய்த்
தாக்கவரு மாய்கையெல்லா மடித்துத்தள்ளு
சதாசித்தம் பூரணத்தி லகலாமல்நில்லு
போக்குவது பரத்தையேநீ போக்கினுக்கால்
புகழான சிவயோகம் புனிதமாமே. (53)

யோகநித்திரை.

புனிதமா யுறங்கவென்றால் வலக்கைமேலே
பூட்டாகக் கால்நீட்டிப் பூரணத்தைநோக்கி
அனிதமாய்க் கேசரத்தில் மனதைவைத்து
அப்பனே லலாடத்தே தூங்கவேணும்
மனிதனாய்ப் பிறந்தாக்கால் சாகாக்கல்வி
வாசிக்குட் சிவமோடு வாழ்க்கைசேர்வான்
செனிதமாஞ் சண்டாளப் பிறவியோர்கள்
செத்திறந்து செனிப்பார்கள் செகத்திற்றானே. (54)

கற்பத்துக்குப் பத்தியபாகம்.

செலியாமல் கற்பங்கள் கொள்ளும்போது
திரிகடுகு திரிபலையுஞ் சீரகம் ஓமம்
கனியான் சாதிக்காய் கிராம்புபத்திரி
கருவேப் பிலையோடு ஆவினெய்பால்
தனியான சர்க்கரைதேன் வால்குருவையரிசி
சதுரான தூதுவளை புளியாரையோடு
தனியான சிறுகீரை சிறுபயறுமாகுங்
கட்டியதோ ருப்பாகுங் கொறுக்கையாமே (55)

கடுக்காய்க் கற்பம்.

ஆகுமே கற்பூரச் சிலையின்சுண்ணம்
அண்டமொடு கல்நாருந் தங்கச்சுண்ணம்
வாகுடனே யான்சொன்னேன் மற்றொன்றுமாகே
வகையாக இந்தமுறை கற்பங்கொள்ளு



மோகமாய்க் கடுக்காயின் முறையைக்கேளு
முயல்வாகச் செங்கடுக்காய் பொற்காய்வாங்கி
பாகமா யிடித்ததனைச் சூரணித்துப்
பாய்ச்சுதற்குச் சிற்றண்டத் தெண்ணெய்வாங்கே. (56)

நயனக்குழி.

எண்ணெய்யது வுழக்கடா பொடிதானுழி
யியல்பாக விட்டதனை மைபோற்கிண்டி
கண்ணான பீங்கானில் பதனம்பண்ணிக்
கனமான புன்னைக்கா யளவுகொள்ளு
விண்ணதனை நித்தநித்தங் கண்ணோட்டம்பார்
வெள்ளிநிற்குஞ் சுழினையிலே வாசியேறுங்
கண்ணதனை முறுக்கியே யேறப்பாரு
கபாலத்தி லமுர்தமது கனிந்துபாயும். (57)

கபசுத்தி.

பாயுமே சுழினைதனைத் திறப்பதற்குப்
பகருகிறேன் கற்பமொன்று பரிவாய்த்தானே
காயுமே கரிசாலைச் சாறுநாழி
கருநியோர் நெய்நாழி கலந்துகாய்ச்சி
வாயுமே மெழுகுபதந் தன்னிலேதான்
வடித்துக்கைப் பெருவிரலி லதைத்தடவிப்
ஏயுமே யுண்ணாக்கிற் புரளவைத்துப்
பழகவே கபமெல்லா மற்றுப்போமே. (58)

மூலசுத்தி.

அற்றுவிடும் இரண்டுவிரல் வாயிலோட்டி
யனலான கபமெல்லா மகற்றுங்கக்கு
மற்றுமினி மூலத்தின் சுத்திகேளு
வாகான குமரிச்சார் சிற்றோண்டெண்ணெய்
உற்றதனை முன்போலக் காய்ச்சிக்கொண்டு
உறவாக நடுவிரலில் தோய்த்துக்கொண்டு
சுற்றிவிடு மூலத்தின் மலமெல்லாந்தான்
சுகமாகக் கீழ்நோக்கும் சுத்தியாமே. (59)

குறி மிளகு கற்பம்.

சுத்தியா யிருநேரம் நாட்டம்பாரு
    சுழிதிறக்கும் பூரணத்தில் சொக்கிப்போகும்
பத்தியா யமுர்தங்கொண் டிறந்துபாயும்
    பாவிகட்கும் இக்கருவைப் பகரலாமோ
வெற்றியா மிளகினுட கற்பங்கொள்ள
    விபரத்தைச் சொல்லுகிறேன் விரித்துநன்றாய்ச்
சித்தியாங் கணமிளகாய்த் தெரிந்தெடுத்துச்
    சிறப்பான வழுரிதனைத் தேத்தாம் வித்தால். (60)

மிளகுசுத்தி மூதண்டம்.

வித்தாலே மூறித்ததனைத் தெளியவைத்து
    விதமாக ஐயைந்தாய்த் தினமுமேற்று
முத்தான வழுரியுடன் கொள்ளும்போது
    முக்கியமடா நூறுக்கு மதிகம்வேண்டாம்
கொத்தான உஷ்ணந்தான் மிஞ்சிற்றனல்
    கூறிலொரு படியாகுஞ் ஜெலத்தினுள்ளே
கத்தான அருகின்வேர் பிடிதானென்று
    சொல்லுகிறேன் மிளகதுதா னிருபத்தைந்தே. (61)

மூதண்ட மருத்துவம்.

அஞ்சாமற் காய்ந்ததுதா னுழக்கேயானு
    லப்பனே பசுவெண்ணெய் பாக்களவுபோட்டு
மிஞ்சாமற் கொண்டிடவே வெப்புத்தீரும்
    விருதான கியாழமிது மெத்தநன்று
நஞ்சுண்ட சிவனன்று கற்பங்கொண்டு
    நந்தனர் சடைமீது தரித்தகற்பம்
பஞ்சகண பதிமூல வறுகீதப்பா
    பார்த்தாக்கா லிதன்பெருமை பகரொண்ணாதே. (62)

மறுகற்பம்.

ஒன்றான அயக்காந்தங் கொண்டபின்பு
    வுத்தமனே யறுசுவையுங் கழற்றிப்போடு
நன்றான வல்லாரை கடுக்காயோடு
    நன்மான மிளகோடு மறுகற்பங்கொள்



நன்றான சட்டைமுனி சொன்னமார்க்கம்
    நலமாகக் கொண்டுவிடக் காயசித்தி
விண்டான கெவுனசித்தி யோகசித்தி
    வேண்டியதோ ரட்டமா சித்தியாமே (63)

கற்பமுண்ணுமுன் பக்குவம்.

ஆமென்ற மூலியெல்லாங் கருப்பேற்றிக்கொள்
    அப்பனே உன்தேகம் பெலத்துப்போச்சு
ஓமென்ற பற்பங்க ளுண்ணும்போது
    வுடலிலே நோய்வந்தால் முந்நூற்றுள்ள
தாமென்ற செந்தூரம் லேகியங்கள்
    தப்பாமற் செய்துவைத்துப் பின்னேகற்பம்
நாமென்று நோய்கள்வந்தால் செந்தூரத்தை
    நாட்டிலே நோய்தீரும் நளினமாமே. (64)

கற்பமுண்ணக்காலம்.

நளினமாய்க் கற்பமுண்ணுங் காலந்தானும்
    நலமான கார்த்திகையு மார்கழியுமப்பா
சுளிவான சுவைதள்ளி வல்லாரைகொள்ளு
    சுகமான கடுக்காய்தான் ஆனிமாதம்
அழியாம லானியிலே மிளகுகொள்ளு
    அப்பனே யுதையத்திற் சீரசுத்தி
ஒளியாமல் கட்டளையை முடித்துக்கொண்டு
    வுதையாதி மூன்றுக்குங் கற்பங்கொள்ளே (65)

பத்தியமுண்ணுங்காலம்-கலை.

கற்பந்தான் தின்பதற்கு மூன்றேமுக்கால்
    கடந்தபின்பு பத்தியங்கொள் கனலேறாது
உற்பனமாங் கற்பத்தைச் சூரியனிற்கொள்ளு
    உண்பதுவு முறங்குவது மொன்றேமார்க்கம்
நற்புடனே பூசைசெய்வார் காலமூன்றும்
    நாளொன்றுக் கிருநேரம் நாட்டம்பாரு
சொற்பமென்ற பெண்ணாசை விட்டாலுந்தான்
    சுகமான சயனத்தில் பெண்தான்வந்தே. (66)

DOCUMENTATION CENTRE Accn. No. Date
4508
1.9.79

சயனமாய்கை வாசிகுறி.

வந்துதான் மருவிடவே விந்துவீழும்
மகத்தான தபமெல்லா மழிந்துபோகும்
சொர்ந்துதா னழியாமல் நினைவாய்த்தூங்கு
குறியான புருவமையங் குறியைப்பாரு
வெந்துதான் போகுமடா மூலத்தீதான்
மேற்கொண்டால் மாயையெல்லாம் வெளியுமாகும்
உந்திதான் பசியாம லிருக்கவென்று
உறைப்பான வாசிகொண்டு வமுர்தமுண்ணே. (67)

கற்பமுண்ண அறிவு.

உண்ணுவது சாதகமாய்த் தள்ளவேணும்
உற்றஅறு சுவையதனை நீக்கவேணும்
பண்ணுவது சிவயோகம் பண்ணவேணும்
பார்வதியுஞ் சிவனுடைய தீட்சைவேணும்
எண்ணுவது மிதக்கெல்லா மிந்நூல்வேணும்
இறவாம லிருக்கவென்றால் கற்பம்வேணும்
கண்ணுவது கற்பமுண்ணப் பாத்திரங்கள்
காந்தத்தி னருமைதனைக் காட்டுறேனே. (68)

காந்தபாத்திரப் பெருமை.

காட்டுகிறேன் காந்தமது மூன்றுற்றுள்ளே
கலந்துரைத்த படியுருக்கிக் கருவில்வாரு
மூட்டுகிறேன் கிண்ணியைப்போல் வார்த்துக்கொண்டு
மூனையான கிண்ணியிலே பாலைவார்த்தால்
ஆட்டுகிறேன் பொங்கியது மேலேநிற்கும்
அப்பனே காந்தத்தி னதிகம்பாரு
நாட்டுகிறேன் தயிர்போலா மந்தப்பாலை
நலமாகக் கொண்டிடநோய் நாடாதெண்ணே. (69)

நாட்டாத கிண்ணியிலே கற்பமுண்ணு
நலமான வமுதுண்ணு பாலுமுண்ணு
தேட்டாத மெய்தேனு முண்ணலாகும்
தினந்தோறுங் கொண்டாக்கால் சித்தியாகும்



ஓடாது விந்துவது கீழ்நோக்காது
உறக்கந்தா னனலுங் கட்டிப்போகும்
கூடாத சித்தியெல்லாங் கூடுங்கூடுங்
குறிப்பான ரசமணியின் கூறுகேளே. (70)

ரசமணி.

கூறான காந்தத்தின் கிண்ணத்துள்ளே
கொட்டியதோ ரசத்தையின்னங் கூறக்கேளு
வீரான கருமத்தஞ் சாறுவிட்டு
வேகிறதோர் சுடுசோற்றுக் குள்ளேவைத்தால்
வேறான வானைவிறி ட்டுச்சாகும்
வெள்ளியம் போலுந்தான் வனுத்துப்போகும்
பேருக வெடுத்துமணி பதினாறுக்கிப்
பேணியே செபஞ்செய்ய வெட்டுமாமே. (71)

மணித்தொழில்.

ஆடுகிற மணியதனைச் சாரணையிற்றீர்ந்தால்
அண்டரண்டஞ் சுத்திவருங் கெவுனமாகும்
கூடுகின்ற பெண்ணோடே வாயில்விட்டாக்கால்
குடிகெடுத்த விந்துவது கட்டிப்போகும்
தேடுகின்ற தேட்டெல்லாம் ரசமணிதானப்பா
தேடவென்றால் காந்தத்தின் கிண்ணங்கிண்ணம்
ஓடுகின்ற வோட்டெல்லாங் காந்தத்தாலே
உத்தமனே கற்பத்துக் குறுதியாமே. (72)

அருளிதல்.

ஆயிந்த வுறுதிசொல்லார் சித்தரெல்லாம்
ஆதிதொடுத் தந்தவரை யழகாய்ச்சொன்னேன்
ஓயிந்தநூல்போலார் வெளியாய்ச் சொன்னார்
ஒழித்திட்டார் சித்தரெல்லாம் பேசிக்கொண்டு
நாயிந்த நூல்வழியாய்ச் சொன்னதென்ன
நாட்டிலுள்ளோ ரெல்லாரு மாண்டுபோனார்
சாயிந்தப் படியானல் தோஷமென்று
ாக்கினேன் பூரணத்தில் சாயுச்சியந்தானே. (73)

சமாதிகட்டும் வகை.

சாயுச்ய மாவதற்குச் சமாதிகேளு
சஞ்சார சமாதியது மவுனிக்காகும்
ஸீயுச்ய மாகவென்றால் கருவைக்கேளு
நினைத்தருகை யாதாரம் போலுண்டாக்கி
மாயுச்ய மாயதிலே பற்பம்போட்டு
மைந்தனே யதிலிருந்து கற்பமுண்ணு
வாயுச்ய மானதொரு யோகம்பாரு
வளமான சித்திவந்தால் மலையிலேறே. (74)

சித்தராகும் பருவம்.

ஏறியே யென்னைவந்து கண்டாயானால்
இயலான சித்தனென்று பேருமீய்வோம்
மாறியே மலைகளிலே சித்தர்கோடி
மாறாட்டஞ் செய்திடுவார் மருவவேண்டாம்
தேறியே பொதிகையிலே முன்னேவந்து
சித்தனென்று பேர்வந்து முத்திரையும்வாங்கி
யேறியே மலைகளிலே நடக்கலாகும்
இத்தனைக்கும் வருவதுதா னருமைதானே. (75)

சிவவேட்கை.

அருமையென்ற சிவயோகம் வந்ததானால்
அதிகமாஞ் சித்தருக்கு ரூபங்கேளு
பெருமையென்ற சட்டையொன்று பிரம்பதொன்று
போரான படிகமணி குண்டலத்தினோடு
திருமையென்ற வுப்பினுட சாந்தான் கையில்
சட்டையுண்டு கயிலாய வர்க்கமானால்
அருமையென்ற விபூதியிற் றளவுமாகி
அப்பனே யோகதண்டு நம்முத்திரைகாணே. (76)

அகஸ்தியர்வேடம்—மூலகுருவேடம்.

நம்முடைய முத்திரைதா னிடைகயாக்ஷம்
காதனுட முத்தரைதான் சிரசிலாகுஞ்
தம்முடைய வர்க்கத்திற் கடிகலிங்கள்
தருவான கமண்டலமுந் தரிப்பார்பாரு



அம்முடைய தீட்சைவிதி யோகமார்க்கம்
ஆனந்த மூலகுரு வேடம்பாரு
கும்மென்ற மேருவுக்குத் தெற்கேகேளு
கோடான கோடிசித்தர் கூடினாரே. (77)

சித்தர்களின் உருவு

மேரு-நாலுதிக்கிலுள்ள சித்தர்ரூபம்.

கூடினார் மேற்கிலுள்ள சித்தர்கோடி
கூர்ப்பான வயதிருபத் திருநூறப்பா
தேடினார் வளர்த்திமுழம் நாற்பதாகுஞ்
சித்திக்கு மேருவுக்கு வடக்கேகேளு
நாடினால் வளர்த்தியது நானூறாகும்
நலமான மூன்றுதிசை சித்தருக்கு
ஊடினார் கிழக்கத்திலே வுரைக்கக்கேளு
வுத்தமனே வளர்த்தியது நானூறெண்ணே. (78)

நூறுகும் வயததுதான் முன்னிரட்டி
நூதனமா யிருப்பார்கள் கோடாகோடி.
பேறுகுந் தெற்கிலுள்ள சித்தரெல்லாம்
பெருமைமெத்த பெருமைமெத்த பேசப்போகா
ஆறுகும் நாலுதிசை சித்தருக்கும்
அடையாள மென்னுடைய காயாக்ஷந்தான்
வீறுகுஞ் சித்தருக்கு மகத்துவந்தான்மெத்த
மெஞ்ஞானி சொரூபமடா விரைந்துபாரே (79)

பூஜைவிதி பிராணயம்.

விரைந்துகற்ப முண்ணயிலே முடிவளர்க்கவேண்டாம்
விடிவேரு பல்விளக்கி நாக்குத்தேய்த்து
நிரைந்துவரும் வழலைசுத்தி மூன்றுஞ்செய்து
திருநீற்றை யுற்றளமா யணிந்துகொண்டு
பாந்தஅங் கன்னியாசங் கரனியாசம்
பரிவான சடங்கமது பிராயாணந்தான்
ஊர்ந்துவரும் காயத்ரி தர்ப்பணமு மோமம்
உறுவேற்று மட்டகர்மஞ் சிவபூஜையாமே. (80)

புத்தி.

பூஜையிலே வைத்தெடுத்துக் கற்பமுண்ணு
புகழாகச் சித்திக்கும் பேறுண்டாகும்
ஆசையிலே பேரின்ப மடுத்தாயானால்
அற்பமனத் தின்மாய்கை நீக்கிப்போடும்
வேசியைப்போ லாசைகொண்டா லெல்லாம்போச்சு
வேதாந்தம் நீயென்று லொருமனதாய்நில்லு
காசில்லை யென்றுசொல்லி விட்டிடாதே
கற்பமுண்டால் வாதசித்தி கைக்குள்ளாமே. (81)

சுத்திமார்க்கம்.

கைக்குள்ளாய் வாதசித்தி வருகவென்றால்
கருவையெல்லாஞ் சொல்லுகிறேன் கனிந்துகேளு
மெய்க்குள்ளா யைம்பதுக்குள் சொன்னேன்முப்பூ
வெளியாகச் சொல்லிவிட்டேன் சுத்தியில்லை
முக்கியமாஞ் சுத்திதனைச் சொல்லக்கேளு
முப்பத்தி ரண்டென்றுகொங் கணர்தான்சொன்னார்
தொக்கிலே சொல்கிறேன்நீ கேளுகேளு
சுத்தியுட சுப்பிரத்தைச் சுருக்கித்தானே. (82)

முப்பூ சுத்தி.

சுருக்கியே சொல்லுகிறேன் முப்பூவப்பா
தூக்குவாய் வகையொன்று பலமொன்றாகச்
செருக்கியே பனிவிளைந்த நீரைவாங்கித்
தெளித்துநீ வைத்திடுவாய் வெவ்வேறாக
நெருக்கியே வெய்யலிலே காயக்காய
நேராக வொன்றுக்குப் பத்துநாள்தான்
தருக்கியே வகையொன்று ஜலம்படிதானென்று
தாக்கியே வெய்யலிலே காய்ந்தபின்னே (83)

காய்ந்தபின்மே லின்னமொரு சுத்திகேளு
காசினியி லமுரியினால் முன்போற்காய்ச்சி
வாய்ந்தபின்பு தேசியின்னீர் தன்னில்முன்போல்
வளமான் சாரநீர் தன்னில்முன்போல்



ஏய்ந்தபின்பு முப்பூவு மொன்றாய்ச்சேர்த்து
யிதமான கிளிஞ்சினீர் படிதான்வாங்கிப்
பாய்ந்திடவே பத்துமுறை தெளித்துநீயும்
பரிவாக வற்றவற்றத் தெளியக்காய்ச்சே. (84)

வெடிப்புச் செயநீர்

காய்ச்சியபின் இன்னமொரு கருவைக்கேளு
கனமானவெடியுப்புப் புளியுங்கூட்டி
வாய்ச்சுதே யிடித்துநன்றாய்த் தீயைமுட்டு
வளமாக நீற்றியிதைச் சுண்ணும்பாக்கிப்
பாய்ச்சுவாய் நாலிலொன்று சாரந்தானும்
பரிவாகப் பொடித்துநன்றாய்ப் பனியில்வைக்க
ஆய்ச்சியாஞ் செயநீரா மந்நீர்தன்னை
அரைப்படிதான் வாங்கிவைத்து அறையக்கேளே. (85)

முப்பூச்சுண்ணம்.

கேளப்பா வீரமொடு பூரஞ்சினங்
கெடியான வுரமுடனே குருவண்டுகாசி
சூளப்பா வகையொன்று கழஞ்சியொன்று
சூட்டியே பொடித்தந்த நீரில்போடு
நாளப்பா யிருந்துடனே சிவந்துபோகும்
நலமான ஜெயநீரில் போட்டுக்காய்ச்சு
தேளப்பா கொட்டியதோர் சுண்ணமாச்சு
திடமாக யிடைக்கிடைதான் சூடன்சேரே. (86)

சூடச்சுண்ணம்.

சூடனுக்கு நேர்பாதி வீரங்கூட்டிச்
சுகமான புழுகதிலே களஞ்சிகூட்டி
தேடுகின்ற வெடியுப்பு நாலாட்டிச்
சிறப்பாக வில்லைசெய்து ரவியிற்போடு
நாடவே காய்ந்தபின் பேட்டில்மூடி
நலமாகச் சந்துவாய் சீலைசெய்து
போடவே முழப்புடத்திற் சுண்ணமாகும்
போக்கதிலே சொல்லுகிறேன் புகழ்ந்துபாரே. (87)

துருசுச்சுண்ணம்.

புகழான சுண்ணத்தில் மஞ்சாடிவாங்கிப்
பூசுவாய் துருசுக்கு வாய்நீராலே
சுகமான வெய்யலிலே காயவைத்துச்
சொல்லுகிறேன் பூநீற்றில் சீலைசுற்றி
அகமான வோட்டில்வைத்து வோடுமூடி
அப்பனே சந்துவாய் சீலைசெய்து
மூகமான மூன்றெருவில் புடத்தைப்போடு
முக்கியமாய் நீறும்பின் பெடுத்துக்கொள்ளே (88)

தாளகச் சுண்ணம்.

எடுத்ததொரு துருசுநீர் வேகமெத்த
யென்சொல்லே னிரதத்தைச் சண்ணிக்கொள்ளும்
அடுத்ததொரு துருசுநீர் வீரங்கூட்டி
அழகான தாளகத்தில் லப்பிப்போடத்
தொடுத்ததொரு புடத்தினிலே வெளுத்துநீறுஞ்
சுகமான வுபரசங்க ளீயமாகுக்
கொடுத்திடவே பத்தரையுங் தப்பாதப்பா
கோடான கோடிகவ ராடும்பாரே. (89)

நூலின் பெருமை.

ஆடியதோர் முப்பூவின் கருவையெல்லா
மறைப்பற்றுச் சொல்லிவிட்டே னலையவேண்டாம்
தேடியதோர் கருக்களெல்லாம் வெளியாய்ப்போச்சு
ஜெகத்திலே கிட்டுகிலோ சித்தாச்சு
மூடியதோர் கருவெல்லாந் திறந்தேனென்று
மோசமென் றிந்நூலை யொளித்திட்டார்கள்
நாடியே நானெடுத்துப் பாவநாச
நற்றீர்த்தக் கரைதனிலே வைத்திட்டேனே. (90)

நூல்வந்த வழி

வைத்திட்ட நூலெடுத்தா னொருவேளாளன்
வந்ததடா விப்படித்தா னுலகத்துள்ளே
னைத்திட்ட மானபல விந்தநூல்தான்
கசடருக்கும் பாவிகட்குங் காணுதோடும்



பொய்த்திட்ட சாத்திரங்க ளெல்லாமெய்தான்
போக்கரிய விந்நூலைப் பேணிப்பாரு
யெய்த்திட்ட கருவெல்லாத் தோயுந்தோயும்
ஈசுரனுந் தேவியுந்தா னிறைஞ்சுவாரே. (91)

சவுக்கார வைப்பு

இறைஞ்சுவார் சவுக்கார வைப்பைக்கேளாய்
இயலான உவருப்பு அமூரியுப்பு
மறைவான கல்லுப்பு வெடியுப்போடு
மருவியதோர் கல்லானைக் கிளிஞ்சிச்சுண்ணம்
திறமான சூடனொடு பாறையுப்பு
கோரகச் சட்டமுனி கொங்கணர்தான் சொன்னார்
குறையாம லிம்முறைக்கு வைத்துக்கொண்டு
கூசாமல் சட்டமுனி சொன்னமார்க்கம். (92)

சொன்னபடி யெண்ணெய்தனைக் கழற்றிப்போடு
சூட்சமாய்க் கடுங்கார மேற்றியேதான்
நன்னயமாய்க் கல்லுப்பைக் கட்டிக்கொண்டு
நலமான வித்தையெல்லா மாடிப்பாரு
பொன்னதிலே யுண்டாகுங் குளிகைகட்டிப்
பொதிகைதனில் வந்தென்னைக் கண்டுசேவி
பின்னமொரு சேதியுண்டு சொல்லக்கேளு
யிதமான வறுசுவையுங் கழற்றுவாயே. (93)

சுந்தரானந்தர் முறை-கற்பம்

கழற்றுவாய் சுந்தரன்றந் நூலைப்பார்த்துக்
கடுக்காயைக் கொண்டுவிடு வருஷமொன்று
தளர்த்துடனே மிளகுதனைக் கொண்டாயானால்
சடத்திலுள்ள நோயெல்லாந் தானேபோச்சு
கழற்றுகின்ற நோயெல்லாஞ் சுருக்கிச்சொல்வேன்
துடியான வல்லாரைக் கற்பத்தேதான்
இளைத்துநீ போகாமல் வருடங்கொண்டா
லிருப்பாயே யிருநூறுண் டிருந்துகாணே. (94)

குளிகை செய்கை

ஆண்டிருக்கச் செய்துகொண்டு வயக்காந்தத்தை
யப்பனே கொண்டுவிடு வருடமொன்று
பூண்டிருக்கும் பிறகுகொள்ளு கற்பமெல்லாம்
புகழாக முப்பூவை முடித்துக்கொண்டு
என்றதொரு வேதைதனைக் கண்டுகொண்டு
யிரதமென்ற ஆனைதனைக் குளிகைசெய்து
மூன்றதொரு குளிகைக்குச் சாரணைதான் தீர்த்து
மூன்பாகத் தங்கமொடு சூதங்கூட்டே. (95)

இரசச்செந்தூரம்

கூட்டியே கெந்திதனைக் குப்பிக்கேற்றிக்
குலாவியே செந்தூரம் செய்துகொண்டு
ஈட்டியே வருடமொன்று கொண்டாயானால்
நமனில்லை கோடிவரை யிருத்தும்பாரு
பூட்டியே வாசிதன்னைக் கூட்டிக்கொண்டு
புதுமையுள்ள மலைமேலே யேறியேதான்
ஆட்டியே மலையிலுள்ள கற்பங்கொள்ளு
அதிகமாய் ரிஷிகளைநீ தெரிசித்தேதான். (96)

சித்தர்களைக்காண்கத் தியானம்-அடுக்கும்வகை

தெரிசிக்கத் தியானமொன்று சொல்லக்கேளு
சிவாயநம ஓம்கிலீம் என்றுசேவி
வரிசிக்குஞ் சித்தரெல்லாம் வெளியிற்காணும்
மகத்தான சித்தரப்பா வணங்கிநில்லு
பரிசிக்கும் படியவரைக் கண்டாயானால்
பணிந்திடுவாய் பாதத்திற் சிரசுதட்ட
கிரிசிக்கும் யார்நூலில் சார்ந்தாயென்று
கேட்கிலகத் தீசுரர்தான் கிருபையென்னே. (97)

சித்தர்மகத்துவ மளித்தல்

என்னுடைய பேர்சொல்லிக் கூட்டிக்கொண்டு
யிசையான பொதிகையிலே யேறுவார்பார்
உன்னுடைய திறங்கண்ட போதுதானே
உறுதியுள்ள சித்தனென்று பேறுமீய்வேன்



பின்னுடைய வொளிகாட்டி யறுதலமுங்காட்டி
மெஞ்ஞான வீடுபெற நிலையுங்காட்டி
பன்னுடைய சிதம்பரமு மேருபூஜை
பாலிப்போ மஷ்டாங்கம் பரிந்துகானே. (98)

யோகிகளுக் கிருப்பிட விஷேடதலம்

பரிவானயோகிக்குத் தலத்தைக்கேளு
பகருவேன் காசிவரை கன்னிமட்டுக்
தெரிவான மலைச்சார்பு மெத்தநன்று
தேசத்தில் நாடதிகஞ் சோளதேசம்
அரிதான பாண்டியிலே வைகைநாடு
அடுத்ததொரு கள்ளர்பத்து அழகர்கோவில்
உசிதான திண்டுக்கல் காளையார்கோவில்
உறவான மதுரையொடு குன்றூருமே (99)

ஆறான தாம்பிரவேணி கரைப்போக்கெல்லாம்
ஆமடா வெகுசித்தி பொதிகைச்சார்பு
கூறான சிதம்பரமுங் காவேரிபோக்குங்
கொள்ளுகிற கற்பமெல்லாஞ் சித்தியாமே
நூறான கன்னியிலே குமரிநின்றாள்
நற்பனமாய் வாலையடா அவள்தானப்பா
பேறுகும் நான்சொன்ன தலங்களுக்குப்
பேதமில்லை பேதமுண்டு பேசவேனே. (100)

பேதபூமி

பேசவது சமுத்திரத்துக் கப்பாற்பத்து
பேறான கடிகையது மேற்கேசென்று
வீசுறதோர் கற்பங்க ளுண்ணவேணும்
மெஞ்ஞானிக் கெங்குமாம் வேதாந்திக்கும்
ஆசுறதோர் தலமதிகம் நிலமதிகம்பாரு
அப்பனே குளிர்ந்ததல மாகுமாகுங்
கூசுறதோ ரென்னவென்றால் ராசநீதங்
குவலயத்தில் பலுநீதங் கொள்கைபாரே. (101)

புத்தி

ப்பாப்பா சமாதியிலே யிருக்கும்போதும்
மலபலவாக் தொழில்முறைகள் செய்யும்போதும்
நேரப்பா பலகூட்டங் கூடலாகா
நெறிகெட்ட சீடர்களைச் சேர்க்கலாகா
ஆரப்பா தனியேதா னிருந்துகொண்டால்
அளவற்ற வித்தையெல்லா மாடுமாடுஞ்
சீரப்பா தேகசித்தி யோகசித்தி
செயலான மலைகளிலே சேர்ந்துகொள்ளே. (102)

பூமிகாதம் விளைபூமி

கொள்ளென்ற குமரிக்கு மேற்கேகேளாய்
கூறுவேன் பதின்காதக் குணமாம்பூமி
விள்ளென்ற பூமிதனிற் பூமிகாதம்
விரைந்தெடுக்குந் தலங்கலையான் விரித்துச்சொல்வேன்
உள்ளென்ற காசிக்குந் தெற்கேபத்து
உறவான கடிகைக்குட் பூமியொன்று
வெள்ளென்ற பூமிக்குக் கிழக்கேதானும்
இருபதுநா ழிகைக்குள்ளே தலமொன்றுண்டே. (103)

உண்டப்பா முன்சொன்ன தலத்துக்கப்பால்
யோசனைதா னென்றுசென்றால் தலமொன்றுண்டு
கன்றப்பா வதின்பிறகு மேற்கேசென்றால்
நலமான கடிகைபத்து மலைச்சார்புக்குள்
சென்றப்பா பார்த்தாக்கால் தலமொன்றுண்டு
சித்தருட நடமாட்டஞ் சொல்லப்போகா
இன்றப்பா சொல்லுகிறேன் விலாடபுரந்தன்னில்
வெகுவிதி யொருதலந்தான் விசாலமெத்தவாமே; (104)

தலவிசேட மகத்துவம்.

மெத்தவடா டில்லிக்கு மேற்கதாக
விருதான தலங்களுண்டு மேவிப்பாரு
சித்தரப்பா கஞ்சமலை சித்தர்வாழ்க்கை
திரண்டதொரு மலையுண்டு வதற்குளப்பா



உத்தமமாங் குருநாட்டில் ஞாலந்தானென்று
உயர்ந்தமலை யடிதானே சித்தருக்கு
வெற்றியுள்ள கன்னடியார் தேசந்தன்னில்
மேலான வயிந்தநகர் தலந்தானென்றே (105)

தலமான ஆற்காட்டின் மேற்கேபத்து
சார்ந்தாக்கா லங்குமே தலமொன்றுண்டு
பெலமான காவேரிப் பூமிதன்னில்
பெருத்ததொரு தலமொன்று ஸ்ரீரங்கத்தில்
நிலமான கோகாணத்துக் கப்பாலேதான்
நெடுந்தூரஞ் சென்றக்கால் தலமொன்றுண்டு
குலமான திண்டுக்கல் தேசந்தன்னில்
குணமான தலமொன்று கூர்ந்துபாரே. (106)

கூர்ந்துபார் கள்ளருட தேசந்தன்னில்
குணமான தலமொன்று வள்ளலூரில்
சேர்ந்துபார் மதுரைக்குத் தெற்கதாகத்
திறமான கடிகைபத்துக் கப்பாலொன்று
ஏர்ந்துபா ரதுக்கப்பால் கடிகையைந்து
எல்லையிலே தலமொன்று யிருக்கும்பாரு
தீர்ந்துபார் மதுரைக்குக் கிழக்கேயப்பா
சேர்ந்துபத்துக் காதத்திற் கப்பாற்செல்லே. (107)

செல்லவே வளையல்செய்யும் பேர்களுண்டு
ஜெயமான தலமதிகஞ் சேர்ந்துபாரு
மெல்லவே யதின்கிழக்கு மறவர்நாட்டில்
வெகுதலங்க ளுண்டுசமுத் திரம்வரைக்கும்
நல்லதொரு கல்லுப்புக் கடலிலுண்டு
நலமான சமுத்திரத்தின் ஸ்ரீராமர்பிரதிஷ்டை
வல்லதொரு நாட்டுக்குள் தலமொன்றுண்டு
மைந்தனே தாம்பிரவேணி வளமைகேளே. (108)

ஆற்றின்கரை பூமி வளமை.

வளமையா மாற்றினுட கரைப்போக்கெல்லாம்
வாகான நாலாறு தலங்களுண்டு

இளமையா மதின்தெற்குக் குமரிவரைகேளாய்
　　ஏழுதல முண்டப்பா வதற்குமப்பால்
பழமையாங் குறவருட தேசந்தன்னிற்
　　பதிவான தலமுண்டு கிட்டக்கிட்ட
உளமையாந் தலங்கள்ரெம்ப யிதல்லாமல்
　　உறைப்பான பூவெல்லா முற்றுப்பாரே. (109)

சலாசத்து பொன்னப்பிரகம் வெள்ளை அப்பிரக பூமி.

பாரப்பா சலாசத்து விளையும்பூமி
　　பரிவான குமரிக்குக் கிழக்கதாக
நேரப்பா காதமது பத்துச்சென்றால்
　　நிலத்திலே வெட்டியே யெடுப்பார்பாரு
சீரப்பா பொன்னென்ற வப்பிரகந்தான்
　　தென்காசிக் கடுத்ததிலே தலந்தானென்று
வேரப்பாவெள்ளையென்ற வப்பிரகந்தான்
　　விரிசதுர கிரிக்கடுக்க விளையும்பாரே (110)

பொன்னிமிளை மூவிலைக்குருந்து சோதிவிருட்சம் வெண்சாரை.

விளையுமடா கிழக்காகக் காதமூன்றில்
　　வெகுவிதமாம் பொன்னிமிளை விளையும்பூமி
தளையுமடா பொதிகைமலைச் சார்புதன்னில்
　　தாம்பிரவே ணிக்கரையி லருவியாற்றில்
மூளையுமடா வதனடுத்த தெற்கேகாத
　　மூவிலையாங் குருந்துதான் மாமுண்டாகுந்
தளையுமடா வதிலேவே சோதிவிருட்சந்
　　தன்னோடு வெண்சாரை தானுமுண்டே. (111)

வேண்ணுவல்.

உண்டடா பச்சையா றதனிலப்பா
　　யுத்தகம்பி வாசமலை யுயர்த்திமெத்த
மன்றடா வதினுடைய கரையிலேதான்
　　நாலாறு மரம்நிற்கும் வெண்ணுவலப்பா
கொண்டடா வம்மலையில் சித்தர்கூட்டங்
　　குறையாது வொருநூற்றுப் பத்துப்பேர்கள்
கண்டடா வம்மலையில் விருட்சமூலி
　　கனமடா சித்தால் காணுதே. (112)



நீலக்கோடிவேலி சங்கிலிச்சித்தர் வாசம்.

காண்போர்க ளம்மலையிற் கிணறொன்றுண்டு
　　கருநீலக் கொடிவேலி கரையிலுண்டு
விண்பேர்கள் போனக்கால் காணாதப்பா
　　விருதுபெற்ற சித்தர்கடான் போகவேணுந்
தாண்பான மயேந்திரமா மலையிலேதான்
　　சங்கிலிச் சித்தருண்டு கொங்கணர்தன்பிள்ளை
வீண்பேர்கள் போனக்க லேறப்போகா
　　உறப்பான கெவுனிக்கு யேறலாமே. (113)

வேண்சாரை வாழுமிடம் வேண்சாரையைக் காணுமிடம்.

ஆகுமே தாடகைதன் சுனைதானென்று
　　அதில்வாழும் வெண்சாரை யஞ்சாறுண்டு
போகுமே யச்சாரை மயேந்திரமலையெல்லாம்
　　போக்குவரத் தாயிருக்கும் பூண்பார்சித்தர்
ஏகுமே யம்மலையி லேறிச்சென்று
　　லியல்பான சுனையருகில் மண்டலந்தானென்று
வாகுமே தானிருக்கும் போதுதன்னில்
　　வருத்ததிலே காணலாஞ் சாரைதன்னை. (114)

சாரை பிடிக்குமுறை வேண்சாறை யறுந்தல்.

தன்னையே கண்டவுடன் ரம்பித்தேதான்
　　சார்வான நடுமையம் பிடித்தாயானால்
பின்னையே பிடித்தவிடங் கையிருக்கப்
　　போராக விருதுண்டாய்ப் பொருந்திப்போகும்
பின்னையே கையிலிருக்கு மதனைத்தின்று
　　லிருபதினா யிரவருட மிருத்துவம்பாரு
பொன்னையே தேடாதே கற்பந்தேடு
　　பொருள்காணப் புருவமையம் நோக்கிப்பூணே. (115)

சதுகிரி மகத்துவம் போன்மலை மகத்துவம்.

பூணப்பா மயேந்திரத்தி லேறித்தெற்கே
　　போனக்கால் நாழிகைதான் பொன்மலைதானுண்டு

ஆணப்பா வதனிலொரு குகையுமுண்டு
　　வதிலிருப்பா ராயிரம்பே ரதிகசித்தர்
காணப்பா அவர்களைத்தான் கண்டாயானால்
　　கனகமது கேட்டதெல்லாங் கையிலீய்வார்
நாணப்பா கெவுனமென்ற குளிகையீய்வார்
　　நலமான கற்பமது நல்குவாரே. (116)

தாடகை சுனை மகத்துவம்.

நல்குவா ரம்மலையி லுதகமுண்டு
　　நலமான தயிலமுண்டு பாஷாணமுண்டு
செல்குவார் மூலிகைதான் கோடியுண்டு
　　திரவியங்கள் கிடாரத்தி லிருப்பதுண்டு
புல்குவார் தாடகையிற் கிழக்குராவில்
　　புதுமையொன்று சொல்லுகிறேன் பிழைக்கும்பேர்க்கு
ஒல்குவா ரடையாள முரைக்கக்கேளு
　　ஓராணுயரம் வொருகையில் துறட்டிதானே (117)

தயிலமிருப்பிடம்-தயிலமேடேக்கும் விபரம்.

கையிலொரு துறட்டிதனைக் கண்டாயானால்
　　காணப்பா வதனருகே கல்லிற்பூண்டு
செயலோடு சித்தரையு மக்காளிற்றான்
　　சென்றக்கால் தயிலமது சிவந்துபாயும்
நயமாக வதிகடுக்கக் குழிதானென்று
　　நலமாக வதிற்றயிலஞ் சென்றுபாயும்
மயமாகுந் தயிலஞ்சித்தர் கொடுபோமுன்னே
　　மைந்தனே காத்திருந் தெடுத்துக்கொள்ளே. (118)

தயிலம்வைக்கப் பாத்திரம்-தயிலம்வைக்க மகத்துவம்.

கொள்ளுவது பேய்ச்சுரையின் குடுக்கைதன்னில்
　　கொள்ளமட்டும் மடைத்ததனைக் கொண்டுபோய்நீ
விள்ளுகிறேன் காசிடைதா னுள்ளேகொள்ளு
　　மேன்மையா மண்டலத்தில் சாவுபோச்சு
தள்ளுவது சட்டையது யெல்லாந்தள்ளுஞ்
　　சயில உதகமென்ற தயிலமப்பா
எள்ளளவு இரும்பிலே தடவிப்போட
　　யேமமென்ற வித்தையது கைக்குள்ளாச்சே (119)



மயேந்திர மலைவளப்பம் நெல்லியிடம் வாலரச மிருக்குமிடம்

உள்ளான மயேந்திரமா மலைக்குத்தாழ
　　ஒருபுறமாம் வடபக்கந் தன்னிலேதான்
கல்லான கல்லிலே குகைதானுண்டு
　　கருநெல்லி யதனிலே யொருமரந்தானுண்டு
தள்ளாத குகைதனிலே கற்பாணிநானு
　　தயிலமுண்டு வுதகமுண்டு தனந்தானுண்டு
விள்ளாத வாலரச மொன்றதாகும்
　　மேலான பரிசனமாம் வேதையாமே. (120)

நம்பிமலைவளம் சோதிவிருட்சம்-செங்கற்றாழை.

ஆமென்ற நம்பிமலை வடபுரத்தில்
　　அதிகமாஞ் சோதியது ஆல்போல்நிற்கும்
வாமென்ற வதினருகே செங்கற்றாழை
　　வரிசையாய் நிற்குமடா யிரத்தவர்னம்
போமென்ற காயசித்திக் கேற்றகற்பம்
　　புதுமையின்னஞ் சொல்லுகிறேன் பூண்டுகேளு
தாமென்ற பொதிகைக்குக் கிழக்குச்சாரில்
　　தாண்டியொரு நாழிகைதான் மலையிற்சென்றால் (121)

சிவந்த விலைக்கள்ளி சேந்திராய் சுணங்கன்மூலி.

சென்றிடவே யவ்விடத்தில் சுனைதானென்று
　　சிவந்ததொரு இலைக்கள்ளி செந்திராயுங்
கன்றிடவே யுண்டாகுஞ் சுணங்கன்மூலி
　　காயசித்திக் கேற்றகற்பம் கணக்கவுண்டு
பண்டுடைய கற்பத்தைக் கண்டபேர்க்குப்
　　பரிவான காயசித்தி கெவுனசித்தி
யென்றுமே வாதசித்தி யெய்துமெய்தும்
　　இறைவனைப்போ லெந்நாளு மிருந்தும்பாரே (122)

நரை திரைமாறத் தயிலம்.

இருக்குகின்ற தயிலமொன்று இயம்பக்கேளாய்
　　இயலான கடுக்காய்வேர்த் தயிலம்நாழி
வருத்துகின்ற நெல்லிக்காய்த் தயிலம்நாழி
　　வளமான தானிக்காய்த் தயிலம்நாழி

திருத்துகின்ற கருந்துவரைத் தயிலம்காழி
சேங்கொட்டை வித்தினுட தயிலம்காழி
பொருத்துகின்ற அழிஞ்சிவிரைத் தயிலம்காழி
புகழான வேம்பின்றேல் தயிலம்காழி. (123)

காழியென்ற சிவன்வேம்புத் தயிலம்காழி
நலமான காரெள்ளுத் தயிலம்காழி
வாழியென்ற வானுளுவைத் தயிலம்காழி
வளமான வகையெல்லாந் தயிலம்வாங்கி
தாளியென்ற பீங்கானும் பாண்டத்துள்ளே
சாதகமாய் விட்டுமொரு சேதிகேளு
காழியென்ற தயிலமதி லோகங்காந்தங்
கருநியதோர் செந்தூரங் கலந்துகொள்ளே. (124)

மலையேறப் பக்குவம்—தயிலத்துக்குப் பத்தியம்.

கலந்ததனை நெல்லுக்குள் மண்டலந்தான்வைத்துக்
கணபதியைப் பூசித்துக் காசிடைதான்கொள்ளு
மலந்ததொரு மண்டலந்தான் கொண்டாயானால்
வளர்கின்ற நரைமாறி வண்டுபோலாம்
நலந்திகழுந் தேகமது சிவந்துகாணும்
நாட்டுக்கு'ள திகமது நாட்டிப்பாரு
ப்லந்தருங்கா ணித்தயிலஞ் செய்துகொண்டு
பாரிக்கு மலைமேலே யேறுயேறே. (125)

ஏறுவது யெப்படித்தா னென்றுயானால்
இடும்பென்ற ஆணவமு முனிவுந்தீர்த்து
கூறுகின்ற கொலைகளவுங் காமம்பொய்யுங்
கொடுமையென்ற பாவங்கள் தன்னைத்தீர்த்து
மாறுகின்ற மனந்துறந்து நிராசையாகி
வளமாகப் பச்சரிசி பொங்கியேதான்
தேறலது பால்கூட்டிச் சிறுபயறுங்கூட்டிச்
செயமாக வோர்வேளை யமுதுகொள்ளே. (126)

வாசிக்குறி.

கொள்ளயிலே யிடைகலையில் வாசிபாரு.
கூசாமல் கெட்டோடே யேறுயேறு



தள்ளையென்ற வாத்தாளை நித்தம்பூசி
சாயுச்சிய பதத்தைநித்தம் சார்ந்துநில்லு
வள்ளையிலே யிதுவெல்லா மகிழ்ந்துபாரு
மகத்தான பூரணமு மனதிற்றோன்றும்
பிள்ளையிலே யுங்களைப்போல் பிள்ளையுண்டோ
பேய்மக்கா ளலையாதே பிழைத்துக்கொள்வே. (127)

பசுபதிபாசம்-புரியட்டம்

கோவென்ற பசுவொன்று பதிதானொன்று
கூறுகெட்ட பாசமொன்று மூன்றுங்கூட்டித்
தேவனென்ற பிறப்புக்கு இடமுண்டாச்சு
சித்தனென்று விதைத்தள்ளி சிவயோகஞ்சேர்
ஆவென்ற வகையில்லை யென்றுசொல்லி
யலையாதே யிந்நாவி லடுத்தசித்தி
பூவென்ற ஆயிரத்தெண் மலர்ப்பூவைத்தான்
போத்தியே திமுட்டப் புரியட்டம்போமே. (128)

பசியாதிருக்க.

போமென்ற புரியட்ட மெட்டினாலே
போகாம லடங்கினால் பிறவிபோச்சு
சாவென்ற சொல்லேது லபிதானேது
சாயுச்சிய மானதொரு ஞானவானே
யாமென்ற அமுர்தமது வுண்டாயானால்
அப்பனே பசிபோச்சு சித்தியாச்சு
காமென்ற வாணவமு மப்போபோச்சு
நலமான சிவசித்தன் ஞானியாமே. (129)

தேக வாசனை.

ஞானியென்று வொருகுலையில் காய்த்ததோசொல்
நாஜென்மங் கோடியிலே யொருவனப்பா
யோனிவாய்ப் பட்டசட மாகையாலே
யுத்தமனே காயசித்தி யாகவேணும்
ஊனென்ற தேகமது கற்பதேகம்
உத்தமனே கயிலாய தேகமானால்
மானிலத்தின் மனிதனல்ல தேவனாச்சு
மைந்தனே யற்பமடா மனிதர்வாழ்வே. (130)

பூநீற்றுக்குரு.

வாழவே இன்னமொரு வரிசைகேளு
    வளமான பூநீற்றை வாரிக்கொண்டு
நீளவே சாறுவராத் தழைகளெல்லாஞ்
    சாதகமாய்ப் போட்டிடவே தண்ணீராகுஞ்
சூழவே காரத்தைச் சிறுநீருப்பில்
    தோய்த்திடவே காரமது சுண்ணமாகும்
கூறவே சாறுகளில் போட்டுச்சாற்ற
    குருவென்ற கற்சுண்ணத் துப்புச்சத்தே (131)

பாஷாணக்கட்டு.

சத்தான சாறுவகை சொல்லக்கேளு
    சம்பிரச் சாறுதான் படிதானென்று
வித்தான முன்சொன்னகுரு வகைதானென்று
    விளங்கவே வகையொன்று வராகனென்று
முத்தாகப் போட்டதனைக் கலக்கிவைத்தால்
    முறிந்துமே யொருநாளில் தண்ணீராகும்
பத்தான தெளிவதனை யிறுத்துக்கொண்டு
    பாஷாணங் கழஞ்சுக்குச் சுறுக்குப்போடே (132)

அயமணி.

போட்டிடவே பாஷாணங் கட்டிப்போகும்
    புகழான செம்பிவிட வெள்ளியாகும்
ஆட்டிடவே யரைப்பொடியில் விட்டரைத்து
    அளவாக வுணர்ந்திடவே மணியுமாகும்
நீட்டியதோர் தங்கமதிற் சேர்த்துருக்கி
    நிசமாக வெள்ளிசெம்பி லீய்ந்தாயானால்
நாட்டிடவே யாரேழு வரைக்குங்காணும்
    நலமான இரும்பிவிட வேதைதானே. (133)

தாம்பிரவேதை.

இரும்பைவிட்டுச் செம்பதனைச் சொல்லக்கேளு
    எழுத்தாணிப் பச்சிலையின் சாறுநாழி
முருங்கையுட பட்டைச்சார் நாழிகூட்டி
    மூந்தினதோர் குருவகைக்கு வராகன்போடு



அரும்பவே யறுபதுநா ழிகைகடந்தால்
    அதனுடைய தெளிவதனை யிறுத்துக்கொண்டு
துரும்பான செம்பதனை யுருக்கிச்சாய்த்தால்
    சுகமாக வீரஞ்சு துய்யானுமே. (134)

பாஷாணக்கட்டு.

துய்யானி னிடைக்கிடைதான் சேர்ந்தாயானால்
    துய்யனுஞ் சொல்லரிது சொல்லிவிட்டேன்
மெய்யாகச் சொல்லுகிறேன் சதுரக்கள்ளி
    விதமான பாலதனைக் கறந்துவந்து
ஐய்யாகேள் முன்குருவில் வராகன்போட்டு
    அறுபதுநா ழிகையிருக்கத் தெளிந்துபோகும்
உய்யவே யொருகழஞ்சு வெள்ளையப்பா
    உழக்குநீர் சுருக்கிட்டாற் கட்டிப்போமே. (135)

நாகக்கட்டு.

போகின்ற பாஷாணந் தன்னைவாங்கிப்
    புக்கிடவே கழஞ்சுக்கு மஞ்சாடித்தூள்
ஆகின்ற நாகமது கட்டிப்போகும்
    அந்தஇடை தங்கத்தை யதனிற்றுருக்கி
ஏகின்ற வெள்ளிசெம்பி லீய்ந்தாயானால்
    யேழரையா மிதன்பெருமை யியம்பப்போமோ
வாகுடைய வழுரியது படிதானென்று
    மைந்தனே முன்குருவும் வராகனென்றே. (136)

சூதக் கட்டு.

ஒன்றாகப் போட்டதனை வைத்தாயானால்
    உத்தமனே கல்சமந்தா னுரைந்துகாணும்
பன்றாகத் தெளிவிறுத்து ரசத்திலூத்த
    பாலையாம் ரசமதுதா னட்டைபோலாம்
நன்றாக வதையெடுத்துக் கருவூமத்தை
    நலமான காயதனிற் புடத்தைப்போடு
வென்றாக வோர்புடந்தான் கோழியாகும்
    விதமாகக் கட்டிப்போம் வெள்ளியாமே (137)

சூதகச் செந்தூரம்.

வெள்ளியென்ற சூதத்தைத் தின்றாயானால்
வெள்ளையென்ற நரைகளெல்லாம் வண்டுபோலாம்
தெள்ளியதோர் தங்கமிட்டுக் கெந்திமிட்டுச்
செந்தூரஞ் செய்திடவே சொர்னமாகும்
அள்ளியதோ ரசவெள்ளி கெவுனமாகு
மப்பனே சாரணையைத் தீர்ந்தபோது
உள்ளியென்ற காட்டுள்ளி யிடித்துக்கொண்டு
வுத்தமனே முன்குருவைப் போட்டிடாயே. (138)

வெள்ளீயம் நீர்வாங்கல்.

போட்டதனைப் பிழிந்திடவே தண்ணீராகும்
புகழான முன்குருவைப் பின்னுமிட்டு
ஆட்டிதனை வைத்துவைக்கத் தெளிவதாகும்
அத்தெளிவில் வெள்ளீய முருக்கிச்சாய்க்கப்
பூட்டிதனைப் பத்துமுறை சாய்த்தாயானால்
புகழாகக் கட்டிப்போம் பூண்டுபாரு
காட்டதனில் ரசங்கட்டுஞ் சுறுக்குப்போடு
நலமான குளிகையது கெவுனமாமே. (139)

லிங்கக்கட்டு.

ஆமப்பா முன்குருவை யிலைக்கள்ளிப்பால்
அப்பனே இட்டுவைக்கத் தெளிந்துபோகும்
வேமப்பா வன்னீரில் சாதிலிங்கம்
விதமாகச் சுருக்கிடவே கட்டிப்போகும்
நாமப்பா வெள்ளியிலே வேதையாகும்
நலமான தங்கத்திற் சேர்ந்துஆடும்
ஓமப்பா யிக்குருவை யண்டத்துள்ளே
உருக்கவே வகைக்குக்கால் வராகன்போடே. (140)

போட்டதனை வெயிலில்வைக்க மெழுகுமாகும்
புகழான பாஷாண மெல்லாஞ்சாகும்
ஈட்டவுள்ள லோகமெட்டில் வேதையாகும்
இதுபோலச் சுறுக்குள்ள போக்கொன்றில்லை
நாட்டமுடன் இக்குருவை வைக்கவேண்டாம்
நலமான பச்சையடா பூநீர்ச்சுண்ணத்
தேட்டமுட னித்தொழிலை முன்னேசெய்து
செயலான லோகத்தி லிருந்துதேறே. (141)



வினையகற்றல்.

தேறுதற்கு யின்னமொரு கருவைக்கேளு
செப்பாத கருவையெல்லாஞ் செப்பினேன்கேள்
யேறுதற்கு மலையொன்று மில்லையப்பா
யிறந்துநீ பிறவாதே யிறவாதேநீ
கூறுவதே சத்தியமே பொய்யாகாது
கொலையொன்று மாகாது கொடுமையாகா
வேறுதுறை யேதுமில்லை வழலையாதி
வேதாந்தக் கருவுக்கு மனமதாமே. (142)

தீக்ஷை யிரண்டுக்குங் காலம் சூரியன் தோற்றம்.

ஆமப்பா மனமுருகச் சித்தியாச்சு
அறிவுகொண்டு சிவயோகத் தடுத்துநோக்கித்
தாமப்பா சிவதீட்சை சத்திதீட்சை
சாதகமாய்க் காலைசிவ மாலைசாத்தி
போமப்பா யிரண்டுக்கு மிடைகலைதான்சித்தி
போக்கோடே மவுனமுத்தி பூண்டுநோக்க
வேமப்பாமூலத்தீ மேலேசாடும்
வெளிகோடி சூரியன்போ லுள்ளேகாணும் (143)

சிவத்தின்கூறு சத்திகூறு.

காணுதற்கு மவுனமுற்றுப் பாருபாரு
காசினியில் விசாரமெல்லாந் தள்ளுதள்ளு
வீணப்பா விசாரமென்ன சமுசாரமென்ன
வெட்டவெளி யொன்றுமில்லை சிவத்தின்கூறு
தோணுகின்ற ரூபமெல்லாஞ் சித்தியாகுஞ்
சுருதிமுடி வீரிரண்டு மல்லாதுண்டோ
ஊணுகின்ற பஞ்சகர்த்தா வெல்லாமாச்சு
உறுதியிந்தக் கருவின்றி வேறேதாதே. (144)

சட்வாழ்க்கை.

ஓதுவது வேதமே யோதவேணும்
உலகத்தில் வேதமில்லா தொன்றுமில்லை
மாதுமக்க ளென்றுதா மெண்ணியெண்ணி
மாள்வதற்கும் பிறப்பதற்கும் வைத்தானீசன்
நீறுவென்ற தீயினிலே விழுந்தாயானால்
செடம்விழுந்து போகுமடா ஞானமேது

தாதுவென்ற சடமிருந்தால் ஞானம்வாய்க்குஞ்
சகலகலைத் தியானமெல்லாந் தருகும்பாரே. (145)

நூலின் மகத்துவ முறைத்தது.

பார்ப்பதற்கு இந்நூலே பார்க்கவேணும்
பரிபூரண சூஸ்திரமாய்ப் பாடினேன்யான்
தீர்ப்பதற்கு வினைகளெல்லாந் தீட்சைசொன்னேன்
செயமான கற்பமது தெளிவாய்ச்சொன்னேன்
கூர்ப்புடனே வாதத்தின் விபரஞ்சொன்னேன்
குறைகளெல்லாந் தீர்த்துவிட்டேன் கூர்ந்துபாரு
சூர்ப்பனகி யாசைகொண்டே யெல்லாம்போச்சு
சுருதியுள்ள கெடியனென்று லெல்லாமாச்சே, (146)

உலகத்தோ டொத்துவாழ்தல்.

ஆச்சிந்த உலகத்தி லிருக்கும்போது
அசலருடன் கூடியா ணவம்பேசாதே
காச்சிந்த வுலகத்தில் நடக்கலாகா
நடந்தாலும் மவுனத்தே தூங்குதூங்கு
காச்சந்த மவுனத்தை விட்டாயானால்
கருவிகடான் கொல்லுமடா தியானம்போச்சு
மூச்சென்ற யோகமுதல் ஞானம்போச்சு
முறையோடே யிருக்கவென்றால் குகையைக்காரே. (147)

சித்தரென்போர் நெறி.

கார்ப்பதுதான் பூரணத்தைக் காக்கவேணும்
காரென்று புருவமையத் திருக்கவேணும்
தீர்ப்பதுதான் வாசனையைத் தீர்க்கவேணுஞ்
ஜெகமொன்று மில்லையென் றெண்ணவேணும்
ஆர்ப்பனத்துக் கழிவில்லா திருக்கவேணும்
அப்பவல்லோ சித்தனென்ற ஆண்மையாச்சு
நாற்பதுக்குள் கற்பமுண்ணக் கோடியாச்சு
நரைத்தாக்கால் நாளதிகம் செல்லும்நன்றே. (148)

வருடநிலை.

நன்றாக நாளதிகஞ் சென்றாலென்ன
நாட்டிப்பார் வருடமொன்றில் சித்தியென்று
புன்றான ஆண்டதுதான் பத்துக்குள்ளே
பரிவான காயசித்தி யோகசித்தி



உன்றான கெவுனசித்தி ஞானசித்தி
உரப்பான சட்டைதள்ளிக் காந்தியாகும்
ஒன்றான தேகமது வரூபமாகும்
உத்தமனே கத்திநடு வோடும்பாரே. (149)

சட்டை கழலு மார்க்கம்.

ஓடுகின்ற தத்துவந்தான் தொண்ணூற்றாறு
மோர்கருவிக் கோர்சட்டை யுரிந்துதானால்
சாடுகின்ற பிறவியெல்லாந் தள்ளிப்போச்சு
சாயுச்சிய பதவியிலே சார்ந்துபோச்சு
பாடுகின்ற வேதாந்தம் வெளியாய்ப்போச்சு
பரிபூரணந் தானாச்சு பகலுமாச்சு
வேடுவன்றா னெடுத்தபுழுத் தன்ரூபங்கொண்ட
விதமாச்சு மாய்கையெல்லாம் வெளியுமாச்சே. (150)

ஆச்சப்பா வாதத்தின் கருவைக்கேளு
வப்பனே வாயிரத்தி னூறுக்குள்ளே
பேச்சப்பா சகலகலை செய்தியெல்லாம்
பேசாத கருவையெல்லாம் பேசிவைத்தேன்
போச்சப்பா பேசிவைத்த கருவேதென்றால்
புகழான சவுக்காரப் போக்குத்தாக்கு
யேச்சப்பா முப்பூவின் தீட்சைமார்க்கம்
இயலான கடுங்காரச் செயநீர்ப்போக்கே (151)

நூல்தொகை விரிவுரைத்தல்.

போக்கான சுண்ணத்தின் கருவுஞ்சொன்னேன்
புகழான செயநீரின் கல்லுஞ்சொல்லி
வாக்கான களங்கோடு செந்தூரங்கள்
வகையான திராவகமுஞ் சரக்கின்வைப்பும்
தாக்கான கருவோடு குருவுஞ்சொல்லி
சாதகமாங் கைபாகஞ் செய்பாகங்கள்
தூக்கான இடைபாகம் பாசைபாகஞ்
சுறுக்காகுந் தாகமொடு தேகமெண்ணே. (152)

எண்ணவே ஞானமொடு மூலிகையின் கூறு
மியல்பான கைபாக மெல்லாற்சொன்னேன்
வண்ணமா மெக்கெத்த நூல்களெல்லாம்
வாகான நிகண்டுமது மருவிப்பாரு

பொன்னான பொன்னதுபோ லிக்நூலுந்தான்
போக்கொன்றுந் தப்பாது மறைக்கவில்லை
நன்னயமாஞ் சாத்திரத்தில் மறைத்தேனென்று
காட்டினேன் வெளியாக காட்டினேனே. (153)

### சுயவர்நிலைமை.

நாட்டிலே யிப்படித்தான் வெளியதாகக்
காட்டியுந்தா னறியாட்டா லென்னசெய்வோம்
பாட்டிலே சொன்னதொன்றும் பலியாதென்றும்
பாவிகள்தா னெடுத்துரைப்பார் பழமையல்லால்
வீட்டிலே யிருந்துகொண்டு வீண்வாய்பேசும்
வெள்ளாட்டிப் பயல்களுக்குச் சாத்திரமெய்யோ
தேட்டிலே சாத்திரத்தைத் தேடவேணுந்
திராவியிலே மனமிருக்கச் சித்தியாமே. (154)

### பூஜையில் தாயைநினைத்தல்.

சித்திக்க வேணுமென்ருல் சொல்லக்கேளு
ஜெகசால மாடுகிற தாயைக்கேளு
புத்திக்கு மவள்பதத்தைப் பூஜைபண்ணு
போக்கொன்றுந் தப்பாது பொய்போகாது
முத்திக்கும் பூஜைமுறை தன்னைக்கேளு
மூண்டதொரு சமாதிக்கு லகிரிவேணும்
பத்திக்கு மூதண்ட லேகியந்தான்
பாங்கான லகிரியப்பா சட்டமாமே. (155)

### தங்கை வரமீய்தல்.

சட்டமாங் கற்பத்துக் குறுதியாகுந்
தாயோடு தந்தைக்குப் பிரிதியாகும்
இட்டமாம் வாமத்தைக் கொண்டாயானு
லெடுத்ததொரு துரையெல்லா மிடறிப்போகுங்
தொட்டதொரு பூஜையிலே வாமம்வைத்து
சுகமாகப் பூஜிக்கச் செலமதானல்
அட்டமா சித்தியது வாச்சுதப்பா
ஆத்தாளா மப்பனுக்கு மாச்சுதெண்ணே. (156)

### விவேகதாட்சி.

ஆச்சுதே யோகத்துக் கேணியாச்சு
வப்பனே கற்பத்துக் காகாதாகும்



வாச்சுதே யென்றுசொல்லி வாமங்கொண்டு
மதிமயங்கி வாய்புலம்பி மயங்கிப்போனல்
யேச்சுதே சாபமது தீரவில்லை
யேமமென்ற வித்தையது யெய்தவில்லை
காச்சுதே யறிவென்ற ஞானம்போச்சு
கசுமால வாதியென்ற கழுதைதானே. (157)

### பச்சைப்பூர வைப்பு.

தானென்ற கற்பூரஞ் சொல்லக்கேளு
சாதகமாம் பரங்கிவைப்புக் கிடையாதப்பா
யேனென்ற சூடனது பலந்தானென்று
யியல்பான வெடியுப்புப் பலமுக்கால்தான்
சேனென்ற வுவர்ப்பூவும் பலமதொன்று
சோதிலே கழஞ்சியொன்று புழுகுகூட்டி
வானென்ற ஆவின்னெய் விட்டரைத்து
வைத்துநீ குப்பியிலே சீலைசெய்யே. (158)

செய்துமே வாலுகையில் தீயைமூட்டு
சுகமாக முத்தியு மூன்றுசாமம்
எய்துமே தீயாற்றி யெடுத்தாயானல்
இளந்தேங்காய்க் காய்போல்தா னிருக்கும்பூரம்
கொய்ததொரு குங்குமப்பூ வாசம்போலக்
குணமாகும் பச்சையென்ற பூரந்தானும்
எய்துமே யளப்பாகும் வாதத்துக்கு
மிதுவாதி குருவாகு விசைந்துபாரே. (159)

பாரப்பா இன்னமொரு சேதிகேளு
பரிவான வீரத்தின் வைப்பைக்கேளு
நேரப்பா கடைதனிலே விற்கும்வீரம்
நோகப் பலமொன்று எடுத்துக்கொண்டு
சேரப்பா வதினேடு துரிசினஞ்
செய்ததொரு நவச்சார மன்னபேதி
ஊரப்பா கறியுப்பு யுவருப்போடு
உறவான வெடியுப்புப் பலமுங்காலே. (160)

காலாக இதுவெல்லாம் பொடித்துக்கொண்டு
கருணைபெற வேணுமென்று குப்பிக்கேற்றி
நாலாக முத்தியு மாறுசாமம்
நலமாக வெரித்ததனை வாங்கிக்கொண்டு
பாலான தேங்காய்போ லுருகிநிற்கும்
பண்பாக வுடைத்ததனை வைத்துக்கொண்டு
சேலாக முன்போல நிறுத்துக்கொண்டு
சேர்த்துநீ பொடித்தெடுத்துக் கும்பிக்கேற்றே. (161)

வீரத்தின் மகத்துவம்.

ஏற்றியே முன்போலே எரித்துவாங்கு
இப்படியே மும்முறையி லிருக்கும்வீரம்
தேற்றியே இவ்வீரஞ் சகலத்துக்குக்
திறமான குருவடா வீரராசன்
நீற்றினமு முருக்கினங்கட் டினமுங்கோடி
கோரான செந்தூரக் களங்குகோடி
வீற்றியே செயநீருந் திராவகமுங்குருவும்
மேலான சாரணையும் வீரமாமே. (162)

சித்தருக்குண்டான நாலுவித்தை விபரம்.

வீரமாஞ் சித்தருக்குச் சொல்லக்கேளாய்
வித்தையிலே நாலுவித்தை மேலாம்வித்தை
வாரமாம் வாதமொடு வசியமாற்றம்
வளமான அஞ்சனமும் வரவும்வேணும்
ஆரமா மிதுநாலும் மில்லாவிட்டால்
அலைதாகுஞ் சித்தருக்கு ளடுக்கமாட்டார்
பாரமாம் வாதமொடு வசியஞ்சொன்னோம்
பார்ப்போர்க்கு அஞ்சனமும் மாற்றம்பாரே. (163)

மாற்ற மை.

மாற்றமென்ற வித்தைக்கு வகையைக்கேளாய்
வால்நீண்ட கருக்குருவி யில்லாவிட்டால்
தோற்றுகின்ற காமரூபி பிணைச்சல்பார்த்துச்
சுருதியாய்ப் பிடித்துவந்து சொல்லக்கேளாய்



ஏற்றுகின்ற வெவ்வேறு சட்டியிட்டு
யெரித்துநீ வறுத்திடுவாய் கருகமட்டும்
போற்றுகின்ற அழிஞ்சியின்வேர் கொண்டுகிண்டிப்
பொடியாக்கிக் கரிப்போலே வறுத்துக்கொள்ளே. (164)

அழிஞ்சில் தைலம்.

வறுத்தகரி தனையரைப்பாய் தயிலங்கொண்டு
வாகான தயிலத்தின் வளமைகேளாய்
பொருத்ததொரு அழிஞ்சிவிரைத் தயிலஞ்செய்து
புதுமையுள்ள தயிலமது விட்டுமத்தி
செறுத்தவிதைப் பொடிசெய்து கலசத்திட்டுத்
தீயான சூரியன்றன் முகத்தில் வைக்கக்
கருத்ததொரு தயிலமது யிறங்கும்போது
கரியுடனே சேர்த்தரைத்துச் சிமிழில்வையே. (165)

வசியம் கருங்குருவிமை, குழியானைமை.

வைத்ததனைத் திலதமிட வசியமாகும்
மாற்றமாந் தேகமது யார்க்குங்காணு
உத்ததொரு கருங்குருவி யிதுபோற்பண்ண
உறுதியாந் தயிலமது உண்மையாகுஞ்
சித்தியுள்ள குழியானை சிரங்கையொன்று
செய்திடவே முன்போலே சித்தியாகும்
புத்தியுள்ள பேர்களுக்குப் பிழைக்கச்சொன்னேன்
புதுமையுள்ள அஞ்சனத்தைப் புகலக்கேளாய் (166)

அஞ்சனமை.

கேளப்பா அஞ்சனத்துக் கஞ்சனப்பாஷாணம்
கிடையாது பறங்கிவைப்புக் கொடுக்கமாட்டான்
நாளப்பா நாட்டிலுள்ள கருவைக்கொண்டு
நாட்டுகிறே னஞ்சனத்தை நன்றாய்க்கேளு
வேளப்பா கருங்குருவி சிவந்ததொன்று
விதமான பச்சோந்தி உடும்புகாக்கை
சூளப்பா பச்சைபாம் பரணை பூநாகஞ்
ஜோதியொத்த இந்திரமாங் கோபப்பூச்சி (167)

மணல் தவளைத் தயிலம்.

பூச்சியென்ற வகையெல்லா முழுதுமாகும்
புகலுகின்ற மற்றதெல்லாந் தலைகளாகும்

ஆச்சியென்ற திதுவெல்லா முணர்த்தித்தாளா
யாக்கியே பறணியிலே யடைத்துக்கொண்டு
வாச்சிதென்ற மணற்றவனைத் தயிலஞ்சொல்வேன்
மைந்தனே நூறுதா னெடுத்துவந்து
காச்சிதென்ற வெய்யலிலே யுலர்த்திக்கொண்டு
காட்டினு மணக்குமுத்துக் காரெள்ளோடு. (168)

திரிசெய் விதம்.

எள்ளோடு அழிஞ்சில்விரை யிடித்துக்கொண்டு
இதமாகக் குழித்தயில மிறக்கியேதான்
விள்ளாதே பறணியிலே யடைத்துக்கொண்டு
மேன்மையாம் பெண்ணுடைய விலக்கச்சீலை
தள்ளாதே சாணிகளஞ் சதுரமாகத்
தானெடுத்து வதில்முன்றாள் பரப்பியேதான்
கொள்ளமட்டுந் திரிபோல யுருட்டிக்கொண்டு
குணமான வெள்ளெருக்கின் நூலைச்சுற்றே. (169)

மைவாங்கும்வகை மைபார்க்கும் பருவம்.

சத்தியதோர் திரியதனை விளக்கிவிட்டுச்
சுகமான முன்றயில மதனில்வார்த்துப்
பத்தியாங் காராமை யோட்டுக்குள்ளே
பத்துகின்ற மையதனைப் பறண்டிக்கொண்டு
வெத்தியா முன்தயிலம் புத்துத்தேனும்
விதமாகச் சரியிடையாய்க் கூட்டிமத்தி
சித்தியாம் பதினாறு வயதுசென்ற
செல்வர்கையி லிட்டிடவே தெரியுந்தூரம் (170)

அஞ்சனத்தின்குணம்.

தூரமது நாழிகைக்குள் பாதாளத்திற்
சூட்டிவைத்த தனங்களெல்லாந் தோணலாகும்
காரமது ஆர்கையி லிட்டாலுந்தான்
கைகடந்து காணுமடா அதீதமைதான்
வாரமது வானபேய்க் கணங்களெல்லா
மாறிவிட்ட மந்திரங்க ளொன்றும்வேண்டாஞ்
சூரையாம் பேய்களுக்குக் கருவதொன்று
சொல்லுகிறேன் கழுதைநெய்யின் சுறுக்குத்தானே. (171)



பூதம்விலக்கத் தயிலம்.

சுறுக்காக யிருக்கவென்றால் சொல்லக்கேளாய்
சுருதியாங் கழுதையுட கொழுப்பைவாங்கி
யிறுக்காக உருக்கிநெய்யை யெடுத்துக்கொண்டு
யிதமான தலங்களிலே திபமேற்று
உறுக்கான பேய்பூத மோடிப்போகும்
உண்மையிது சொல்லிவிட்டே னுலகுள்ளோர்க்குத்
தறுக்கான வாதவித்தை வருமுன்னாகத்
தாரணியிற் செய்துகொண்டு தபசுபண்ணே. (172)

தனங்களிருக்குந்தலம் அழகர்மலை.

பண்ணையிலே தனங்கிடைக்குந் தலங்கள்சொல்வேன்
பாரிலே யலையாதே பாங்குகேளாய்
உண்ணியதோர் மதுரைக்கு வடகீழாக
வுறைக்கிறே னழகர்மலை யுயரத்தானும்
கண்ணயிலே சுனையருகில் விருக்ஷமொன்று
கலமாக வதின்கீழே சுனைதானென்று
உண்ணயிலே யருவியுட ஆறலப்பா
வுலகத்தோ ராடுவார் தீர்த்தமென்றே. (173)

சித்தர்வைப்பு.

தீர்த்தமென்ற வச்சுனையில் கிடாரமொன்று
செயமான ஆயக்கால் தன்னில்தூங்கும்
தீத்தமென்ற வோராளுக் குள்ளேப்பா
கோரான சித்தர்வைப்பு நெடுங்காலமாச்சு
காத்தமென்ற காயசித்தி செய்யவேண்டில்
காசினியி லதையெடுத்துச் செலவுசெய்து
வாத்தமென்ற கற்பமுண்டு வாழ்வோர்க்காகும்
வையகத்தோ ராசைவைத்தால் வாயாதென்னே. (174)

மயிலாடு மலையில் கார்த்திகவீரவாசன் வைப்பு

வாய்க்கவின்னஞ் சொல்லுகிறேன் மதுரைக்குமேற்கே
மலையொன்று மயிலாடும் போத்தையென்பார்
ப்ராக்கியமா மம்மலையிற் கிணறொன்றுண்டு
பாரப்பா வதிலிறங்கிப் பாருநீதான்

தாக்கியதோ சிரண்டாளின் தாழப்போனால்
தங்கமென்ற பாளமது நிறையவுண்டு
காக்கியதோர் பாளத்தை எடுத்துக்கொண்டு
கார்த்திகைவீர வர்ச்சுனன்றான் வைத்தவைப்பே (175)

மைனாகமலையில் சித்தர் வைப்புச் செந்தூரம் குகைக் கதவுதிறக்க.

வைப்பான பவனச மலைக்குமேற்கே
மைனாக மலையென்று அதற்குப்பேரு
செப்பான குகையொன்று வதிலேயுண்டு
செந்தூரக் காடப்பா சித்தர்வைப்பு
மெய்ப்பான குகைவாசல் திறப்பதற்கு
விதமொன்று சொல்லுகிறேன் விரும்பிக்கேளாய்
ஒப்பாகச் சொன்னஉச் சாடனஞ்செபித்து
உணர்வாக நூற்றெட்டு உருத்தான்சார்பே. (176)

செந்தூரப்பதம் பக்குவம்.

சார்பாகச் செபித்திட்டால் திறக்கும்பாரு
தயவாக வதினுள்ளே சென்றாயானால்
ஆர்வாகக் கோடிசெப்பில் செந்தூரங்கள்
அட்டலோகம் பழுக்கும் வேதைமார்க்கம்
பேராக மண்டலங்கொள் காயசித்தி
பிணியான தணுகாது வயித்தியத்தின்மார்க்கம்
ஆர்வான கெவுனசித்தி குளிகைசித்தி
அட்டமா சித்திமுத லாடும்பாரே. (177)

கதவடைக்க—கருமலை

பாரப்பா வதிலிருக்குஞ் செந்தூரத்தைப்
பரிந்துனக்கு வேணமட்டு மெடுத்துக்கொண்டு
சேரப்பா கதவதனை யடைக்கவேண்டிச்
செபித்திடுவாய் நூற்றெட்டுத் தம்பனந்தான்
ஆரப்பா கதவதனைத் திறக்கப்போறார்
அறையுகிறே னின்னமொரு வதிசயந்தான்
காரப்பா களக்காட்டின் மேற்கதாகக்
கருமலையொன் றம்மலையில் சுனைதானென்றே (178)



கருமலையில் தயிலவைப்பு.

ஒன்றான சுனையருகிற் கிணறொன்றுண்டு
உத்தமனே தயிலமது நிறையநிற்கும்
நன்றான தயிலத்தைக் கலசந்தன்னில்
காணப்பா முகந்துகொண்டு கருவைக்கேளாய்
நன்றான இரும்புசெம்பு லோகமெட்டில்
நாட்டினால் தங்கமது நலமதாகும்
உண்டான செய்தியிது யின்னங்கேளாய்
உரைக்கின்றேன் வெளியாக வுரைக்கின்றேனே. (179)

நம்பிமலையருகில் விபூஷணர் வைப்பு தங்கக்காசு.

உரைக்கின்றே னம்பிமலை நம்பிக்கோவி
லுற்றதொரு சந்நிதிக்குக் கிழக்கதாக
நிறைக்கின்றேன் மலையருகில் குத்துக்கல்லு
நிற்குதடா வதனடியில் தங்கக்காசு
கரைக்காசுங் கற்குழிதா னொன்றுக்குள்ளே
கனகமென்ற காசதுதான் கோடியுண்டு
திரைக்கின்றேன் மூடிக்கல் செய்தமூடி
திறமாக யிருக்குமடா திறக்கொண்ணாதே. (180)

கல் திறக்கத் தியானம்.

ஒன்றான கல்திறக்கும் வகையைக்கேளாய்
உற்பனமாய் வயிரவரைப் பூசித்தேதான்
நன்றான வயிரவன்றன் தியானமோத
நலமான மூடிக்கல் திறந்துபோகும்
பன்றான கனகத்தை யெடுத்துக்கொண்டு
பரிவான மூடிதன்னை யடைத்துப்போடு
வின்றான விபூஷணர்தான் வைத்தவைப்பு
மேதினியில் நடவாதே மலையிலேறே. (181)

மருந்துமலை.

ஏறுதற்கு இன்னமொரு வகையைக்கேளாய்
இயல்பான குமரிக்கு மேற்கேயப்பா
கூறுவா ருலகத்தோர் மருந்துமலையென்று
குறித்துவைத்த மருந்துதனை யறிமாட்டார்

தேறுவா யம்மருந்தை யறிவதற்குச்
செய்தியொன்று சொல்லக்கேள் மேற்கதாக
ஏறுவா யம்மலையி னுச்சிதன்னில்
இருக்குதடா சுனையொன்று யிருக்கும்பாரே. (182)

பனைப் பாஷாண வேதை.

இருக்கின்ற சுனைக்குள்ளே பனைப்பாஷாணம்
இயல்பான பனங்குலைபோல் கிடக்கும்பாரு
அருக்கின்ற குலையதனை யெடுத்துக்கொண்டு
அழகான தீயிலிட்டுச் சிவக்கக்காய்ச்சி
பருக்கின்ற வெள்ளாட்டின் பாலிற்போட்டால்
பாதியிரு கூறாக வெடித்துப்போகுங்
குருக்கொண்ட பாஷாணச் சவுரிபோலக்
கோழிமுட்டைக் கருப்போன்ற கொள்கைகாணும். (183)

மருந்துமலையில் தயிலமிருப்பிடம்-அனுமார் வைப்பு.

காணுகின்ற பாஷாணங் கழற்றிவாங்கிக்
கால்பணமா யேற்றவிடு கற்பமாகுந்
தோணுகின்ற பாஷாண வகையிற்றேய்த்து
சுகமான காரமிட்டு உருக்கிவாங்கிப்
பூணுகின்ற நவலோகந் தன்னிற்பூட்டப்
பொன்னாகும் பத்தரையும் பொய்யாதப்பா
கோணுகின்ற வதனடுக்கக் குகையொன்றுண்டு
குகையினுட பாகத்தில் வாசலுண்டு (184)

வாசல்திறக்க நவகோண பூஜை.

வாசலது காணும லடைத்துப்போட்டார்
மகத்தான சித்தருட மாய்கைமாய்கை
ஊசலென்ற கதவதுதான் திறப்பதற்கு
உபாயமொன்று சொல்லுகிறே னுண்மையாகக்
காசலையா யம்மலையி லிருந்துகொண்டு
கருதியே நவகோண வாலைபூஜை
யேசலுட நாற்பதுநாள் பூஜித்தாக்கால்
ஈஸ்பரியாள் கிருபையினால் வாசற்காணும். (185)



கிருபையினால் வாசலது திறந்ததானால்
கேளப்பா வதனுள்ளே நுழைந்துபாரு
உறுதியுள்ள வீடதுபோல் விசாலங்காணும்
ஒருபக்கத் தொருகிணற்றில் தயிலம்நிற்கும்
பொரியென்ற அத்தயில மொண்டுகொண்டு
பூரணமே யென்றுசொல்லி பூஜித்தேதான்
மறுபடியுங் கதவைத்தா னடைத்துப்போட்டு
வந்திருந்து செய்கின்ற மார்க்கங்கேளே. (186)

தயிலம் வந்த மார்க்கம்.

மார்க்கமந்தத் தயிலம்வந்த வகைதான்கேளாய்
மாருதிதான் மருந்துமா மலையிற்சென்று
சேர்க்கையிலே கொண்டுவந்தார் ஸ்ரீராமர்பேரில்
செத்தவர்க டனையெழுப்புஞ் செய்கையாலே
போர்களத்தில் மடிந்தவர்கள் பிழைத்தபோது
போகாதே வாங்கிவைத்தார் புதுமையாக
மார்க்கமுள்ள தயிலமது [illegible]ண்டபேர்கள்
மகத்தான சித்தரடா ஆதியாமே. (187)

ஆமிந்தத் தயிலத்திற் பணவிடைதான்கொள்ள
ஆதிசதா சிவன்வரைக்கு மிருந்தும்பாரு
ஓமிந்தத் தயிலமது யார்க்குக்கிட்டும்
உறுதியுள்ள சித்தரென்று லபிக்கும்பாரு
வாமிந்தச் சாத்திரந்தான் கிடைத்தபேர்க்கு
மறுபிறவி யில்லைமகத் தானசித்தன்
சோமிந்து தரித்தசிவன் சொன்னமார்க்கஞ்
சொல்லிவிட்டேன் வெட்டவெளி யாகத்தானே. (188)

தோற்ற மெய்தல்.

வெளியாகத் தோணுதற்குக் கருவைக்கேளாய்
வேதாந்த நூல்களெல்லாம் விரைந்துபாரு
ஒழியாத ஆசையெல்லா மொழித்துப்போடு
ஊடுருவச் சுழிமுனையை யூணிப்பாரு
வழியோடே கற்பமுண்ண மார்க்கம்பாரு
வாதவித்தை செய்வதற்கு வகையைப்பாரு
தெளிவாக ஏறுதற்குத் தீட்சைபாரு
ஜெகஜாலக் கூத்தெல்லாஞ் சேரப்போக்கே. (189)

### கொங்கணர் பெருமை.

போக்கான சாத்திரங்க ளொன்றுமில்லை
பூரணத்தி னூல்போலச் சொல்லாதொன்றும்
நோக்கான கொங்கணர்சொல் கடைக்காண்டத்தில்
நுணுக்கங்க ளதிகமுண்டு கண்டுபாரு
வாக்கான விந்நூலு மந்நூலும்போல்
வகைவிபர மாயொன்றும் விளக்கவில்லை
தூக்கான தூக்கெல்லாஞ் சொல்லிவிட்டேன்
சோதித்தால் தெரியுமடா சுருதிசொல்லே. (190)

### நூல் மகத்துவம்.

சுருதிகண்டால் சுருதிகொண்டு யேறவேணுந்
துன்மார்க்கர்க் கிந்நூலைச் சூட்டலாகா
பருதிகண்ட பனிபோலே வினைகள்நீங்கும்
பாரிலுள்ளோர்க் கிந்நூலைப் பகரவேண்டாம்
கருதாம லிந்நூலை யீய்ந்தாயானால்
கைலாசச் சித்தர்வந்து ஜபிக்கச்செய்வார்
ஒருத்தராய்க் கண்டுகொண்டு மனத்துள்வைத்து
உருத்துடனே வந்துவிடு மலையின்மீதே. (191)

மீதான மலைகளிலே யேறினாலும்
விருதாகு மிந்நூலைக் கைவிடாதே
வாதாடுஞ் சித்தர்வந்து யெதிர்த்தாரானால்
மறவாம லிந்நூலை யெடுத்துப்பேசு
ஓதாமல் வாய்பிதற்றி யோடுவார்கள்
உனக்குத்தா னெதிரொரு முண்டோவென்று
ஆதார மானதொரு கருவெல்லாந்தான்
அறைந்ததினால் பூரணநூ லானவாறே. (192)

### குழிக்கல்லளவு.

வாரான குழிக்கல்லின் மார்க்கங்கேளாய்
மைந்தனே பிரமாவின் சிரசுபோலே
கூறான வகலமணி விரல்முப்பத்துங்
கொள்கையாம் நிகலமணி விரல்கால்பத்து



வீறான விழும்பதுதான் விரலிரண்டு
வீதியிலே யாழமது விரலிரண்டு 57
பேறான யிருபுறமு மூக்குமாகும்
பெரிதான குழவியைத்தான் பேசுவேனே. (193)

### பிரம்பளவு-ஜெபமாலைக் கணக்கு.

பேசுகின்றேன் பதினாலங் குலமாய்நீளம்
பெரிதான வட்டமணி விரல்கால்வீதி
ஆசுநே ரிம்முடியங் குலம்பத்தாகும்
ஆவிடையுஞ் சிவலிங்க மானவாறும்
வீசுகின்ற பிரம்பதுதான் மொழியைத்தாகும்
வேதாந்த நீளமது விரல்பத்தொன்று
ஈசரன்றான் வகுத்தருளுங் கணக்கீதப்பா
யேற்றஜெப மாலைபதி னாறுமுகமஞ்சே. (194)

### சித்தர் வேட மறிய.

அஞ்சாகும் ஆறுகும் அதீதமாகும்
அணிவிரலால் யோகதண் டாறுமாகும்
பஞ்சாட்சரக் கவசகுண் டலந்தான்கேளு
பரியினுட செம்பதிகம் பளிங்கதிகமாகும்
மஞ்சாடி பதினொன்று பதினாறுகும்
மக்களே யிருபுறமு மகிழ்ந்துகொள்ளு
நெஞ்சுறத்துக் காகுகிற யோகவெட்டி
நெடுநீளந் தொண்ணூற்று றங்கலமாம்நேரே. (195)

### கைலாய வர்க்கம் அறிய.

நேரான வீதிநால் விரலேயாகும்
நிஷ்டைக்கா சனம்புலியா சனமுமாகும்
கூரான ரசலிங்கம் பூஜையாகும்
கோவணந்தான் பூங்காவித் கடகங்கையிற்
சீரான ரசக்குளிகை ஜெபமாலைக்கு
ஜெகமதனில் கிடையாது ஜெபவிசேடம்
பேரான கைச்சரந்தான் உப்புமணியப்பா
பேசரிய கயிலாய வர்க்கத்தோர்க்கே. (196)

வர்க்கத்தின் பெருமை யறிதல்.

வர்க்கத்தி லதிகமடா சிவயோகந்தான்
வண்மையுள்ள மெய்ஞ்ஞான மார்க்கம்ரெண்டு
சொர்க்கத்தில் சொர்க்கப்பேர் பெறவுனக்குத்
தொல்லுலகில் மனிதரோ டுறவுமுண்டோ
கார்த்திக்கக் கர்க்கமென்ற கசடர்தங்கள்
கையிலே யேற்பதுதான் மிகவும்கொஞ்சம்
மார்க்கத்தி லாகவுன்னை வணங்கவேணும்
வணங்காமற் போனதென்ன வறிந்துகொள்ளே. (197)

சிவயோகம் மெய்ஞ்ஞானி மார்க்கம்.

அறிவான பேரின்பத் தடுத்தானாகில்
அசைவையென்ற தீட்சைபத்து மறிந்தானாகில்
குறியான சிவயோகங் குறித்துக்கண்டார்
கோமளையாம் பராபரைநிர்க் குணத்தைக்கண்டார்
பிரியாமல் சிவனுடைய வெளியைக்கண்டார்
பேரான சிவயோகி ரிஷிமெய்ஞ்ஞானி
நெறியான விதற்கெல்லா மறிவேயாசான்
நினைத்துமக்க ளொருமனதாய் நிலைத்திடீரே. (198)

யோகத்துக் கதிகாரி.

நிலைத்திட ரென்றாலும் நிலைக்கமாட்டான்
நீடுலகில் கோடியிலே யொருவனப்பா
கலைத்திட ரென்றாலுங் கலைக்கப்போகா
கனத்தகல முள்ளதொரு ராசிசேர்ந்தோர்
மலைத்திட ரென்றாலு மலைப்பானோதான்
வச்சிரம்போ லறிவுடைய மக்காள்மக்காள்
உலைத்திட ரென்றபுத்தி யுலகிலுள்ளோர்
ஓகோகோ ஒருகோடி உலுத்தர்காணே. (199)

கர்மி போய் வேடர்நிலை.

காணுவேன் வாதமென்பார் யோகமென்பார்
கற்பமுண்ணப் போறேனென்பா ருண்டேனென்பார்
பூணுவேன் தீட்சைபத்தும் பெற்றேனென்பார்
பூரணநூல் பாராத புலையரப்பா



தானுவாய் நின்றபராஞ் சோதிகாணாற்
சதாசிவன்றான் வந்தாற்போல் பூஜைசெய்வார்
ஆணுவத்தா லலைந்துகெட்ட மட்டைப்பேச்சை
யடுத்துநின்று கேளாதே யகலப்போவே. (200)

சித்தர் மரபுள்ளோர்க் குரைத்தல்.

போவென்று சொன்னதுதா னுரைமைந்தா
புகழ்பெரிய சித்தருட மரபுள்ளோரைக்
கூவென்று தர்க்கமிடு மூலகமாண்பர்
கூட்டுறவை விட்டுவிடு குன்றிலேறு
தேவென்று சித்தருடன் சேரவேணுஞ்
செப்புவார் வேதாந்தந் திறந்துசொல்வார்
ஆமென்று வலையாதே கற்பங்கொள்வார்
அப்பனே யோகமுற்று லதிதப்பேறே. (201)

பேறறிதல்.

பேறென்று சொல்வதுதான் ஞானப்பேறு
பேசரிய வேதாந்தம் பெற்றபேறு
நூறென்று பூரணநூல் பார்த்தபேர்கள்
நுண்மையென் றுஞ் சிவயோகத் திருந்தபேரும்
வாறென்ற காயசித்தி யானபேறு
மகத்தான தீட்சைவிதி யறிந்தபேறு
ஓறென்ற வமுர்தமதை யுண்டபேறு
ஓகோகோ கெவுனசித்தி யுறுதிப்பேறே. (202)

வயிராக்கியம்பூணல் ஆக்கை நிலையாமை.

உறுதியா மித்தனைக்குங் கருவேதென்றால்
உத்தமமா மனமல்லோ விதற்குமூலம்
பொறுதியாங் குணம்வந்து சாந்தமானால்
பூலோக மாய்கையெல்லாம் விட்டதானால்
கருதியா மனமுருகி நிராசையானால்
சொல்லொன்றுந் தப்பாது சித்தியாச்சு
விருதாவி லலைந்தலைந்து ஞானம்பார்த்தால்
வேரற்ற மரம்போலே விழுந்துபோமே. (203)

வீழ்ந்திறந்து போகின்ற பேரேயல்லால்
    மெய்ஞ்ஞானம் வந்தவர்கள் காணாரப்பா
சூழ்ந்திருந்த வண்டமெல்லாஞ் சோதித்தாக்கால்
    சுகிர்தவான் கோடியிலே யொன்றுகாணும்
வாழ்ந்திருந்த வுலகத்தே யிருந்தாலுந்தான்
    மானிடரி லொருவனடா வறியப்போகா
தாழ்ந்திருந்த தன்மையுற்றுச் சிறியோர்போலத்
    தாரணியி லேயிருப்பார் பெரியோர்தானே. (204)

சமயக்கோள்.

தானென்ற கலைக்கியான மறிந்தாலென்ன
    தற்கமொடு மாயையுற்றால் தவறிப்போகும்
வானென்ற நிராசையுற்று மாய்கைபோக்கி
    மனமுருகிப் பூரணத்தி லன்புசேர்ந்து
கோனென்று யிருந்தவர்க்கித் தனையுமெய்துங்
    குவலயத்தி லறுசமயக் குருடர்கேட்டார்
தேனென்ற சிவபூஜை சத்திபூஜை
    தெரிந்தவனே சிவயோகி சித்தனுமே. (205)

இந்நூலுக்கு வேண்டிய நூல் பெயர்.

ஆமென்ற சித்தருக்கு மிந்நூல்வேணும்
    அப்பனே பூஜையிரு நூறும்வேணும்
தாமென்ற தீட்சையிரு நூறும்வேணுஞ்
    சாதகமாம் ஞானத்தில் நூறும்வேணும்
ஏனென்ற வாதமிரு நூறும்வேணும்
    இயல்பான கொங்கணரைஞ் ஞூறும்வேணும்
வாமென்ற சார்வுக்குச் சட்டநாதர்
    வைத்தாரே வெளியாக வாதந்தானே. (206)

கல்வி யொழுக்கம்.

வெளியாகச் சொல்லுவரோ வேதம்நாலும்
    வேதாந்தி யானுக்கா லடக்கம்வேணும்
களியாக வுலகத்தே கருவைச்சொன்னால்
    கழுதையவன் கரையேற மாட்டான்போபோ



சுளியாக மனதுள்ளே யடக்கமானால்
    சுருதியாஞ் சித்திக்குஞ் சித்தனுவான்
தெளிவாகப் பேசுவதார் சித்தர்பேசார்
    திறப்பதார் செடமழிந்த ஞானிதானே. (207)

ஏகபாத விளக்கம்.

ஞானமென்ன யோகமென்ன இரண்டுமொன்று
    நலமறியா மாடுகடான் வெவ்வேறென்பார்
பானமென்ன வமுர்தமென்ன இரண்டுமொன்று
    பண்பரியாப் பாவிகடா னசுத்தமென்பார்
மானமென்ன ஈனமென்ன ரவிமதிதானென்ன
    வையமென்ன வானமென்ன ஆண்பெண்ணென்ன
காலமென்ன வுலகமென்ன ஜாதியென்ன
    கருதிப்பா ரொன்றாகுங் காணுங்காணே. (208)

சிவயோகம்-பூஜைபலன்.

காணுகின்ற தர்மமது செய்வாராகில்
    காசினியி லவர்க்குமவர் பிதிர்க்குமாகும்
தோணவே பாவத்தைச் செய்வானாகில்
    சொன்னவற்கா மல்லாட்டால் சுற்றத்தார்காம்
ஊணவே சிவயோகஞ் செய்வானாகில்
    உயிரதுதான் மோக்ஷமெய்து முண்மையுண்மை
பூணவே பூஜைசெய்தால் சிவத்துக்காகும்
    பூஜையென்ன மனக்கனிந்தால் புகழுமாச்சே. (209)

அன்பில்லார் ஞானக்குறி.

ஆச்சப்பா கனிவல்லோ பூரணந்தான்
    அரகரா மனமுருக வருமைமெத்த
காச்சப்பா நின்றதொரு கன்னெஞ்சார்க்குக்
    காயசித்தி ஞானசித்தி கடினமாகும்
பூச்சப்பா ஞானிகடான் பூலோகத்தில்
    பூரணமே தெய்வமென்பான் பூஜையென்பான்
பேச்சப்பா மெத்தவுந்தான் படித்துச்சொல்வான்
    பேசாமல் மனமுருகாப் பெரியமாடே. (210)

உலகாதியந்த முடிவறிதல்.

பெருமையென்ன வாழ்வென்ன கீர்த்தியென்ன
    பேச்சென்ன மகிழ்ச்சியென்ன பிதுர்க்களென்ன
அருமையென்ன சுகமென்ன கோவிற்குளமென்ன
    அதீதமென்ன அரகரா சிவாயமென்ன
உரிமையென்ன வுறவென்ன சங்கற்பமென்ன
    வுலுத்தமென்ன ஈவென்ன கற்பமென்ன
கருமையென்ன செம்மையென்ன கல்வியென்ன
    காசினியில் நரகமென்ன சொர்க்கமென்ன. (211)

என்னவே குருவென்ன சீடனென்ன
    இயல்பென்ன இயல்புகெட்டுப் போனதென்ன
வன்னமிகுஞ் சாதியென்ன நீச்சமென்ன
    மாய்கையென்ன கற்பமென்ன அழிவதென்ன
பொன்னென்ன மனமென்ன சீர்தானென்ன
    பொல்லாத தாயென்ன பிறப்பதென்ன
முன்னென்ன பின்னென்ன முறைதானென்ன
    முடிவறிந்தோன் சிவயோகி மூர்த்தியாமே. (212)

மூர்த்தியென்றும் முத்தியென்று மிரண்டுஞ்சொல்வார்
    முக்கியமென்பார் சிலதெல்லா மூடர்மூடர்
ஆர்த்தியென்ற பூரணத்தா னல்லாதுண்டோ
    அதிற்பிறந்த தைக்துவகை யல்லாதுண்டோ
கீர்த்தியென்ற வகையறிந்து சித்தானார்
    கிலேசமில்லா ஞானியென்று சிலபேரானார்
நிர்த்தியென்ற ரிஷியோடு முனிவரானார்
    சிவயோகி யென்றதிரு நாமந்தானே. (213)

ஒடுக்க முணர்வறிதல்.

திருவுடைய நாமமென்ன சிவயோகந்தான்
    ஜெகத்திலுள்ளோர் செய்வதொன்றுஞ் செம்மையல்ல
அருவுடைய தாயினுட ஆட்டுஆட்டு
    ஆதியென்ற சிவனாட்டு ஐவராட்டு
கருவுடையோ ரறிந்துகொள்ளு மீதல்லாமற்
    காசினியோர் சொல்வதிலே கதையொன்றில்லை



மருவுடைய பூவினுட வாசம்போல
    மனமுருகிப் பூரணத்தில் மாளுமாளே. (214)

ஆதிவஸ்து அனாதிவஸ்து.

மாளாம லாண்டிருந்தால் யோகியாச்சு
    மார்க்கமந்தப் படிதானே மெய்ஞ்ஞானிக்கும்
ஆளாம லாண்டிருப்பா ரானந்தாயும்
    ஆதிவஸ்து அனாதிவஸ்து ரெண்டுந்தானும்
கேளாமற் கேட்டிருப்பார் நடனவோசை
    கிரிகையென்ற மனமங்கே புக்கிப்போகும்
வாழான வாழ்வுசிவ யோகவாழ்கை
    மற்றதெல்லா மாய்கையென்ற வாழ்கையாமே. (215)

நூலின்தோகை வகையின்பம்.

ஆமிந்த இருநூற்றுப் பதினாறக்குள்
    அடக்கிவைத்த பொருளெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
ஓமிந்த வுலகத்தி லிந்நூல்கிட்டில்
    உலகத்திற் சித்தநிக முண்டாய்ப்போச்சு
தாமிந்த சூத்திரத்தைக் கெணியாதிய்ந்தால்
    தலைதெறித்துப் போகுமடா சத்தியஞ்சொன்னேன்
நாமிந்தப் படிசொன்ன யோகிக்கீய்வாய்
    நலமான பூரணசூஸ் திரந்தான்முற்றே. (216)

அகஸ்தியர் பூரண சூஸ்திரம் 216.

முற்றிற்று.

# புத்தக விளம்பரம்.

| அகஸ்தியர். | ரு—பை. |
|---|---|
| ஷை பரிபூரணம் 1200. அச்சில் | |
| ஷை ஐந்து சாஸ்திரங்கள் | 2—00 |
| ஷை கௌமதி நூல் 400 | 2—00 |
| ஷை தற்க சாஸ்திரம் 300 | 1—50 |
| ஷை கற்பமுப்பு குருநூல் | 1—50 |
| ஷை பூரணசூஸ்திரம் 216 | 1—50 |
| ஷை வைத்திய பூரணம் 205 | 1—50 |
| பன்னீராயிரத்துக்குச் சூஸ்திரமான | |
| ஷை பன்னிரு காண்டம் 200 | 1—50 |
| ஷை பூஜாவிதி 200 | |
| ஞான சைதன்யம் 51-ம் சேர்ந்தது | 1—50 |
| ஷை வகார சூஸ்த்திரம் 200 | |
| ஷை சுருக்கம் 100-ம் சேர்ந்தது | 1—50 |
| ஷை தத்துவம் 300 அச்சில் | |
| ஷை பரிபாஷை 300 | 1—50 |
| ஷை துறையறி விளக்கம் | 0—50 |
| காகபுசண்டர் பெருநூல் காவியம் ரூ | 5—00 |
| கோரக்கர் மலைவாகடம் | 3—00 |
| போகர் கற்பம் 300 | 1—50 |
| திருவள்ளுவர் கற்பம் 300 | 2—50 |
| புலஸ்தியர் கற்பம் 300 | 1—50 |
| பீராங்கி முனிவர் ஜோதிடம் 300 | 0—75 |
| பெரிய கந்தரநுபூதி. | 0—50 |
| கருவூரார் நொண்டிவாதகாவியம் 700 | 2—00 |

இராமதேவ ரென்ற யாகோபு சாஸ்திரங்கள் யாவும் இருக்கின்றன கேட்லாக் எழுதினால் அனுப்பக்கூடும்.

ஜி. இராமசாமிக் கோன். புக்ஷாப்

நெ 4 குருசாமிக் கோனார் சந்து. வடக்குமாசி வீதி. மதுரை.